ஸ்ரீயைநம:

ஸ்ரீராமகிருஷ்ணாயநம:

கற்பில்லாமங்கையற்கு கற்பை யுண்டுபண்ணும்

பொருட்டு

பதிவிரதாபூஷணமென்னும்

# ஸ்ரீகளுக்கு ஞானபோதினி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
17 NOV. 190
MADRAS

இஃது

சில கனவான்களான கிரகஸ்தர்கள் கேட்டுக்

கொண்டபடியினால்

ம-ள-ள-ஸ்ரீ பூ-இராகவுலுநாயுடவர்களால்

சிலநூல்களி னின்றெடுத்தெழுதப்பட்டு,

ஆ. நம்பிநாயுடு அவர்களால்

ஒருவாறுதிருத்தி

எம்பிரஸ் ஆவ் இன்டியா அச்சுயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

சுபகிருது௵

(Copy Right Registered.)

அணா 2-6.

1902 MADRAS

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# இந்நூலின் சிறப்பு.

இப்பூமியின்கண் சிலர் வாழ்ந்தும், சிலர் கஷ்டப்பட்டும், லர் ஞானத்தை யடைந்தும், சிலர் அஞ்ஞானத்தை யடைந் ம், சிலர் பிணியிலடைந்தும், சிலர் பிணியில்லாமல் சுகத்தை டைந்தும், சிலர் பாபஹேதுக்களுக் குட்பட்டவர்களாயும், வஜன்ம கர்மத்தை யிச்சன்மத்தில் வொழிக்கவேணுமென் கருத்து கிஞ்சித்தேனும் இல்லாமல் வர ர பாபஹேதுக் க்கே காரணமாய் விடுகிறார்கள். அந்த பாபங்கள் இக்கலி ல் விசேஷப்பட்டு அநேகருடைய புத்தியை நாசமாக்கி க்கிறது. ஆழ்வார் சொல்லியிருக்கிறதும் என்னவெனில், தநூற் பிராயநூறு மனிதர்தாம் புகுவரேனும் பாதியுமுறங் போகு நின்றதிற் பதினையாண்டு பேதைபாலகனதாகும் பசி மூப்புத்துன்பம் ஆதலாற் பிறவிவேண்டேன் அரங்க கருளானே), என்று ஆழ்வாரும் சொல்லியபடி இப்படி க்கு கொடுத்த ஆயுள் வேதசாஸ்திரப் பிரகாரம் நூறு ஆண் ருந்தும் அதில் நித்திரையில் ஐம்பதுவருஷம் கழிந்துவிடு து மன்னியில் நின்ற ஐம்பதுவருஷத்தில் குழந்தை பருவத் ம் பிணியினாலும், பசியினாலும், துன்பத்தினாலும், இப்படி ருஷம் கழிந்துவிடுகிறது; அப்படி கழிந்துபோயும் நின்ற வருஷத்தில் தன்னுடைய பெருமைகளை தன்சினேகிதர் டன் சொல்லி சொல்லி மற்ற வருஷங்களையும் போக்கடி க்கொள்ளுகிறார்கள். இப்படி கலியுகத்தில் கீழ்யெழுதிய ம் எல்லோரும் திருஷ்டாந்தமாய் பார்க்கிறோமல்லவா? வை திருஷ்டாந்தமாகக்கொண்டு நமது நாட்டின் கண்ணிரு பாபஹேதுக்களை போக்கடித்து இப்பொழுது யெடுத் க்கும் இப்பாப ஜென்மத்தை கிருதார்த்தமாக்கிக்கொள்ள டுமென்கிற கருத்து அநேகருக்கு இருந்தும் கைகூடிவரு இல்லை.

மேலும் இப்பூலோகத்தில் சஞ்சரிக்கும் ஸ்திரீகள் புத்தி லியர்களாயும், சிலர் புத்தியீனர்களாயும், அப்படி புத்தியிருந் னமென்கிற சம்பத்தும் வித்துவமென்கிற கெர்வங்களை ந்து. தான் இன்னது செய்தால் பாபம் இன்னதுசெய்

தால் புண்ணியமென்று தெரியாமலேயே கெட்டுப்போய்விடுகிறார்கள். மேலும் புத்தியுள்ள ஸ்திரீகளாயிருந்தாலும எந்தகாலத்தில் யெப்படியெப்படி செய்யவேணுமோ அதுகளை பொத்தியாய் மறந்துவிடுகிறார்கள். அப்படி மறந்துவிட்டு துற்சாவகாசத்தால் துற்நடைவடிக்கைகள் வருகிறது. அதனால் பெரியோர்களை மதியாமலும், புத்தியுள்ள மனிதருடன்சேராமலும் இப்பேர்கொத்த பாபத்துக்குட்பட்டு ஞானத்தை மறந்து காலத்துக்குத்தக்க கோலமாய் விபரீதார்த்தங்களை பண்ணிக்கொண்டு தான் உண்ணுகிறதும் நல்ல வஸ்திரங்கள் முதலானதை உடுத்திக்கொண்டு தன் யிஷ்டப்படியெல்லாம் தன்னிச்சைகளை நிறைவேற்றிக் கொள்ளுகிறதும், தன்னுடைய பர்த்தாவை அலட்சியம்செய்து விடுகிறதும், அவன் சொல்லை கொஞ்சமேனும் மதியாமல் தள்ளிவிடுகிறதுமாய் இப்பூமியில் தற்காலம் நடந்துவருகிறது நமது கண்களினால் பார்க்கிறோமல்லவா! தனக்குத்தானே பாபஹேதுக்கள் யென்சம்பாதித்துக் கொள்ளவேணும்; பாரதமுதலான கிரந்தங்களை பெரியோர்கள் நமக்காக கஷ்டப்பட்டு நமக்கு புத்திவரும்படி யெழுதியிருக்கிறார்களல்லவா ஐ ஐய்யா! தலையெழுத் திப்படியாயிருக்கிறது.

ஏனய்யா கடவுள் நம்மைசிருஷ்டித்தார் சிருஷ்டித்தவர் யெந்தகாரணத்தினால் சிருஷ்டித்தாரென்று நாம் கண்டறிய வேணுமல்லவா, இப்பொழுது பாருங்கள் நமக்கு கண்களென்றும், மூக்கென்றும், வாயென்றும், கைகால்க ளென்றும், மற்று அவையவங்களெல்லாம் பழுது இல்லாமலே சிருஷ்டித்திருக்கிறார். அப்படி யிருந்தாலும் ஒவ்வொரு அவயவங்களிலிருக்கும், குணங்களை பார்க்குமிடத்தில் உசிதமாகவே இருக்கிறது. கண், மூக்குஇல்லாவிட்டால் எந்தவஸ்துவையாகிலும், உண்ணமாட்டோமல்லவா! ஏனென்றால் வாசனைதெரியாமலும் அதின் குணம் இப்பேர்க்கொற்றதென்றும் தெரிந்துக்கொள்ளாமல் நாம் உண்போமா பாருங்கள். அப்படியே கண்பார்வை இல்லாமல் யிருக்குமேயாமாகில் இது பூமியென்றும், இது ஆகாயமென்றும், மனுஷரென்றும், இது மிருகங்களென்றும், எந்த வஸ்துவையாகிலும், பார்க்கிறதற்கும் அதனுடையகுணதிசயங்கள், எப்படிபுலப்படும்; அப்படியே சிரசுமுதல் கைகால் பரியந்தம் நமக்கு ஆதாரவுக்காகவே பகவானருள்பண்ணி யிருக்கிறார். ஆனதினால் யெல்லாஸ்திரீகளும் இப்பதிவிரதா பூஷணமென்னும் இப்புத்தகத்தை வாங்கி படிப்பார்களேயாமாகில் இகத்திலும் பரத்திலும் சுகமடைவார்களென்பது திண்ணம்.

ஸ்ரீ

ஸ்ரீயைநம:

ஸ்ரீராமகிருஷ்ணயநம:

# பதிவிரதாபூஷண மென்னும்

# ஸ்ரீகளுக்கு ஞானபோதினி.

## மேலோர் கவி.

குலமகட்குத்தெய்வம் கொழுநனேமன்ற
புதல்வர்க்குத்தந்தையுந்தாயும்— அறவோர்க்கு
அடிகளேதெய்வமனையோர்க்குந்தெய்வம்
இலைமுகப்பைம்பூணிறை.

## கற்புநிலை இல்லாமங்கையற்கு வற்புருத்தல்.

கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் யென்ற இந்த மூன்றுயுகங்களிலே அனேகஸ்திரீகள் பதிவிரதைகளாய் இகத்திலும் பரத்திலும் சூரிய சந்திரர்களுள்ள பரியந்தம் தங்களுடைய கீர்த்தியை நிலைக்கும்படி செய்துவிட்டுப் போனார்கள். இந்த கீர்த்தி நிலைமையினாலன்றோ அனேக புருஷாளும் இந்த துச்சமான பூலோகசம்பத்தைவிட்டு நீடூழியாய்வாழ எண்ணங் கொண்டு அந்த மோக்ஷவீடு யென்கிற சம்பத்தையடைந்தார்கள்; ஆனால் அந்தபதிவிரதாதர்மம் இலேசானதல்ல; மௌடீகமான ஜென்மத்தைக்கூட பாவன மாக்கிவிடும். எந்தப்பாவங்கள்;இந்த ஜீவாத்மாக்கள் செய்தவர்களாயிருந்தாலும் தன் குலத்தில்எந்தஸ்திரீ கடைத்தேறினளோ அந்தமுன்னேழுதலைமுறையும்,பின்னேழு தலைமுறையும்,முக்தியடையுமென்று வேதவியாசர் முதலானவர்கள் எழுதியிருக்கிறார்கள். மேலும் தன் குலமாதர்கள் கற்புநிலை தவறினவாகளானால் குலங்கெடும்,குலக்கேட்டினால் சந்ததி கெடும், சந்ததிகேட்டினால் தேவர்களுக்கும்- பிதுர்களுக்கும்-கேடுறும். பிதுர்கள்கெட்டு தேவலோகத்தைவிட்டு திலதற்பண முதலானதுகளை வாங்காமல் நஷ்டப்பட்டு சாமான்யலோகமடைந்து, தேகம்மெலிந்து, தன் பரம்பரையைப்பற்றி குரூரபார்வையுடன் பார்த்தும், தூஷித்தும்,

ஏனெனில் நமது கால்வழியில் நல்ல சந்ததிகிடையாமல் விபசாரம் செய்த ஸ்திரீக்கு கெற்பந்தரித்து அந்த கெற்பத்தின் பிள்ளையினால்கொடுக்கப்பட்ட பிண்ட பிரசாதங்களைநாம்வாங்கக்கூடாது என்று பிரளயாக்கினியைப்போல அந்தபிதுர்க்களுக்கு கோபம்பிறந்து சாபமிடுவார்களன்றோ! அவர்கள் சாபத்தினால் மறுபடியும் இக்குலம் விளங்குமா! கடைத்தேறுமா! மற்றொரு சந்ததி பிறக்குமா! இன்னுமிருக்கும் குலமாதர்களெல்லாம் புத்திரசம்பத்து இல்லாமற்படிக்கு துக்கப்பட்டு கெட்டலைய வேணுமே எத்தனை ஜென்மமானாலும் கடைத்தேறுகிற மார்க்கம் கிஞ்சித்தேனும் கிடையாது. ஐயோ! ஒரு ஸ்திரீயினாலன்றோ குலங்கெட்டு நாசமாகிப்போய்விடுகிறது, அதனாலன்றோ பீஷ்மர் அனேகவிதமான தர்மங்களை தர்மாந்தனனுக்கு ஒருவிதமாய் சொல்லிக்கொண்டு வரும்பொழுது பதிவிரதா தர்மத்தைப்பற்றிய விசேட மகிமையை அடியேனுக்குச் சொல்லியருளவேண்டுமென்று தர்மனந்தனர் கேட்க பீஷ்மர் சொல்லிக்கொண்டு வருகிறார்

கேளும் தர்மபுத்திரனே! நாரதர்முதலான பிரம்மரிஷிகளால் இப்பதிவிரதாக்களுடைய சரித்திரங்களைப் பேசியிருக்கிறார்கள்; அதில் ஸ்திரீகள் யிருக்கும் நிலைமையைப்பற்றி பேசியதாவது மாதர்களிளமைப்பருவத்தில் பிதாவினாலும், யௌவ்வனத்தில் கணவனாலும், மூப்பில் மைந்தனாலுங் காக்கத்தக்கவராகையால், எக்காலமும் மாதர் உரிமையுடையவரல்ல. ஆகையால் மாதர்கள், தங்களைத் தாங்களே காக்கவேண்டும். அதுவே அம்மாதர்களுக்கு நல்ல விரதமாகும். கள்ளுக்குடித்தல், துஷ்டர் கூட்டுறவு, கணவனைவிட்டு அயலூருக்குப் போகுதல், கணவனை விட்டுத் தீர்த்தயாத்திரை முதலானவை செய்தல், தான் விரும்பிய விடத்திலே தூங்குதல், அயல்வீட்டில் யிருக்குதல் இவ்வறுவகைச் செய்கையும் மாதர்க்கு நிந்தையான செய்கையாம். திரிகரண சுத்தியையுடையவளாகி கணவன் சொற்கடவாமல் நடக்கும் மனைவியானவள், இகத்திற் பெரியோர்களாலே நல்லவளென்று கொண்டாடப்பட்டவளாகிப் பரத்திற் பதியினுடைய உலகத்தை யடைவாள். கணவன் சொற்படி

நடவாதவள், பாவப்பிணியால் வருத்தப்பட்டு நரியாய்ப் பிறப்பாள், கற்புநிலைதவறினமனைவியைமனுவெழுதிய பிராயச்சித்த காண்டத்தில் விதித்த பரிகாரத்தினாலே சேர்த்துக்கொள்ளத்தகாதவளானால் அந்தப்பரிகாரஞ் செய்யுமளவு மவளைக்காக்க விருப்பமிருக்கும் பட்சத்தில் மேல்வரும் விதிப்படி சேர்த்துக்கொள்ளவேண்டும். நாரதரும்சொல்லியதாவது வெளிப்பட்ட கற்புநிலைக் கேடுடை யவளாகிய மனைவியைக் கணவனானவன், சுருதி விதிக்காரியத்திலும், மிருதிவிதிக் காரியத்திலும், அவளுக்குள்ள அதிகாரத்தைத நீக்கித் தலைமழித்தலும் தரைப்படுக்கையுங் கற்பித்து இழிவான ஆடையுணவுகள் கொடுத்து அசுசியான விடங்களைச் சுத்திசெய்யும்படி செய்வித்து தனது வீட்டிலேயோரிடத்தி லிருக்கச்செய்வது கடமையாகும்.

“பெண்ணிற்பெருந்தக்க யாவுள கற்பென்னுந் திண்மையுண்டாகப்பெறின்” என்னும் திருவள்ளுவ நாயனார் திருக்குறளில் “ஒருவன் தன் மனைவியாளிடத்தே கற்பு என்னும் கலங்காநிலைமை, இருக்கப்பெற்றால் அவன் பெறுதற்குரிய பொருள்களுள் மனையாளினும் உயர்வாகிய பொருள் எவை இருக்கின்றன ?” என்று சொல்லப்பட் டிருத்தலால் உலகத்தில் பெண்களாய்ப்பிறந்தவர்கள் தமக்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, என்னும் நால்வகைக் குணங்களும் ஏதுவாக, மனதைப் பலவிடத்தகுஞ் செல்லவிடாமல் நிறுத்திக் கற்பு நிலைகெடாமல் இருக்கவேண்டும். அந்நான்கு குணங்களில் நாண் - என்பது நாணம்; மடம் - என்பது எல்லாம் அறிந்தும் அறியாதது போல் இருத்தல்; அச்சம் - என்பது, என்றும் காணாததைக் கண்டவிடத்து அஞ்சுதல்; பயிர்ப்பு - என்பது கணவர் அல்லாதவர்கை தம்மேல் படின் உடம்பு அருவருத்தலா யிருத்தல் குணம்.

விவாகம் இல்லாமல் கன்னிகைகளாய் யிருக்கும் பருவத்தில் தாய் தந்தையர் ஆதீனத்திலும், விவாகம் ஆனபின்கணவர் ஆதீனத்திலும், கணவர்க்குப் பிற்காலம் புத்திரர் ஆதீனத்திலும், இல்லாவிட்டால்சகோதரர் ஆதீனத்திலும், இருக்கவேண்டுமே அல்லாமல் ஒருபோதும் பெண்கள் சுவாதீனப்பட்டு இருக்கலா

காது. கொண்டகணவனை மேன்மையாகப் பாவித்து அவன் சொல்லைத் தடுக்காமல் அவனுக்குக்கீழ் அமைந்து பக்திவிநயம் இவைகளுடனே "பொய்சொன்னவாய்க்குப் போஜனங்கிடையாது." என்பதுபோல பொய்பேசாமல் கறந்தபால் கறந்தபடி அவன் விஷயத்தில் உண்மையாய் ஊசியுஞ் சரடும்போல மனைவி அவன் கருத்தின்வழி ஒழுகல் வேண்டும். பெண்ணைக் கட்டிக்கொடுக்கும் பொழுது, பிதா (கல்வி கேள்வி நிறைந்த பண்டிதனுக்குக் கொடுக்கவேண்டும்) என்றும், (தாய் - மகள், ஐசுவரியவானுக்கு வாழ்க்கைப்படவேண்டும்) என்றும், (சுற்றத்தார் நல்ல குலஸ்தன்வந்துவாய்க்கவேண்டும்) என்றும், (அந்தப் பெண் அழகிற் சிறந்தவனை நாம் வரிக்கவேண்டும்) என்றும் நினைக்கிறது உலக வழக்கமல்லவா! ஆயினும் அது அப்படியே வாய்க்குமா? தெய்வச்செயலின்படி அல்லவோ சம்பவிக்கும், "குலமகட்கழகு தன் கொழுனனைப் பேணுதல்" என்பதனால் தன் புருஷன் அழகுயிருந்த ஊரிலே குடியிருந்து அறியாத குரூபியாய் யிருந்தாலும் அவனை நவமன்மதனாகவும் என்றும், அசாத்தியரோகம் உடையவனாய் யிருந்தாலும் ஆரோக்கியம் திடகாத்திரம் உடையவனாகவும், அவன் ஒரு எழுத்தேனும் அறியாத நிர்மூடனாயிருந்தாலும் அவனைக் கல்விக் களஞ்சியமாகவும் "பாண்டவர்களை நான் அறியேனோ? கட்டிற்கால்போல் மூன்றுபெயர், என்று வாயினாற்சொல்லி யிரண்டுவிரல்காட்டி நிலத்தில் ஒருகோடு கிழித்தவனைப் போன்ற கணக்கறியாத நிர்மூடனாய்" இருந்தாலும் ஆதிசேஷன்மேல் நித்திரைசெய்யும் ஸ்ரீமகாவிஷ்ணுவைப்போல நிபுணனாகவும் உண்ணச் சோற்றுக்கும் கட்டக்கந்தைக்கும், கதியற்று அடுப்பிற் பூனை தூங்க, கையில் அரைக்காசுக்கும் வழியில்லாத அஷ்ட தரித்திரனாய் இருந்தாலும் குபேரசம்பத்து மைந்தனாகவும், கொக்குப்போல நரைத்துக் கண்குழிந்து பல்வீழ்ந்து வில்லைப்போல வளைந்த முதுகுடைய கூனற்கிழவனாய் யிருந்தாலும், நல்ல யௌவனம் உடைய விடபுருஷனாகவும் பாவனைசெய்து அவனை அவமதியாமல் எப்போதும் பாதுகாத்தாடக்கவேண்டும், மனைவியானவள் கணவனுக்குத் தாதிபோலப் பாதப்பணிவிடை செய்பவளும், மந்திரிபோலச் சமயமறிந்து நல்ல ஆலோசனை சொல்ப

வளும், ஸ்ரீமகாலட்சுமிபோல பெண்ணைப் பெண் யிச்சிக்கத் தக்க அதிரூப சௌந்தரியவதியும், பூமாதேவிபோலப் பொறு மையுடையவளும், வேசையைப்போல பர்த்தாவைச்சரசகேளி விநோதத்தால் சந்தோஷப் படுத்துகின்றவளுமாய் இருப்பத ன்றி அன்புள்ள தாய்போல இனிய உணவுகளால் போஷிக் கின்றவளுமாய் இருக்கவேண்டும். தாய்க்குப்பின்தாரம் என்று உலகம் சொல்லுகிறது அல்லவா. ஒருவேளை கணவன் கோபி த்தால் தானுங்கூட கோபியாமல் அவன் தன்னை ஆசிர்வதித்த தாகவும், அவன் வைதால் அவனைத்தானும் எதிர்த்துத் திட்டா மல் தன்னை அவன் வாழ்த்தினதாகவும் அவன் கைச்சேஷ்டை (அதாவது அடித்தல்) முதலிய தீமைகளைச்செய்தாலும் அவை களை அப்படி நினையாமல் புருஷன் சரசத்தால் தன்னைத்தட்டி விளையாடுதல் முதலிய செய்கைகள் ஆகவும் நினைத்துச் சாந்த த்தோடும் அவனருகில் வந்து "கை எப்படி நோகின்றதோ?" என்று அவனுக்கு இதஞ்சொல்லி அவன்கோபத்தைத் தணிக்க வேண்டும் அவ்வாறுசெய்தால் அவன் பொல்லாத மூர்க்கனானா லும் அவனுடைய கல்லானநெஞ்சுங் கரைந்து பரமசாதுவாய் விடுவான்; பின்புவரும்மோக்ஷவீடுமடையலாம் இதுதிண்ணம்.

அதுபோல தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொ ள்ளத் திடமில்லாத ஸ்திரீகள் அவ்விதமடையும்படிக்கே முனிவர்கள் ஜாதி சமயாசாரம் கூறியருளினர். மேலும் அவர் கள் நீதிநெறியில் கட்டுப்பட்டுத் தங்களைக் காத்துகொள்ளும் படியான சாதனமடையும்படிக்கே யிளமைபருவத்தில் பிதா வும் யௌவனத்தில் புருஷனும் மூப்பில் மைந்தனும், காக்க வேணுங் கணவனும்பிள்ளையுமில்லாத மனைவியானவள் அவள் புருஷபக்ஷத்தாராகிய கணவனுடைய பிதாமுதல் சபிண்டர் வரையிலுள்ளவர்கள் காக்கவேணுமென்றும், அவர்களும் இல் லாவிடில் அரசர்கள் காக்கவேணுமென்றும், விதிகளை விதித்து எந்தக்காலத்திலும் அவர்களிஷ்டப்படி நடத்தும் உரிமையவர் களுக்குக் கிடையாது என்று கூறினார்கள்.

தங்களைப் பாதுகார்த்துக்கொள்ளச் சக்தியில்லாத ஸ்திரீ களின் நன்மைக்காகவே இந்துக்களாகிய நம்மில் உயர்ந்தஜாதி

முதல் தாழ்ந்தஜாதி வரையில் ஒருகுடும்பத்திற் பிறந்த சகோதரர்கள் யாவரும் ஏககுடும்பமாகவே யிருக்கவேண்டுமென்றும், அந்தந்தக் குடும்பஸ்திரீகள் வெளிசென்று லௌகீகவிவகாரம் நடத்துவதற்கும், அயலார் மோகியாதபருவம் வந்து மருமகளை யாள்வதற்குறிய குணம் வருகிறவரைக்கும் குடும்பத்திலிருந்து பிரியலாகாதென்றும் அவ்வாறு பிரியாதிருப்பதினால் ஸ்திரீகள் விபசாரம் செய்வதிலிருந்து பெரும்பாலும் காக்கப்படுவார்களென்றும் பெரியோர்கள் கூறுகிறார்கள்.

ஆதலால் மனைவியின் போதனையைக் கேட்டுச் சாதாரணமாய்ப் புருஷர்கள் குடும்பத்தை விட்டுப் பிரியலாகாது, மீறிப் பிரிந்துபோனால் ஒருக்கால் அவன் நாயகி மிக்கவிபசாரஞ் செய்து கெட்டுப்போவதுடன் குலத்திற்கும் இழிவையுண்டாக்கிக் குற்றமுடையவளாய் நரகத்துக் குள்ளாவாளென்றும், புருஷனும் குற்றத்துக்கேதுவான தோஷமுடையவனாவானென்றும் பெரியோர்கள் கூறுகிறார்கள்.

முற்காலத்தில ஒரு புருஷனுடைய மனைவியானவள் விபசாரம் செய்யவேண்டுமானால் மானாபிமானம் - அச்சம், பயம், நடுக்கமுதலியதும் இயற்கையாகவே யுடையவளாய் புருஷன், மாமன், மூத்தார், மைத்துனன், மாமி, ஓரகத்தி, நாத்தினார், தாய், தந்தை, அண்ணன், தம்பி, சுற்றத்தினர் அக்கம் பக்கத்தினர் முதலானவர்களுக்குப் பயந்து விபசாரம்செய்யவே துணியாள். அன்றி துணிந்தாலும் தேகம் நடுங்கும்படி கலங்கி இவர்களெல்லாம் காணக்கூடாத காலம்பார்த்துச் சோரஞ்செய்வாள். ஒரு காலத்தில் அவளுடைய சோரத்தனம் வெளிப்பட்டால் குடும்பத்தைவிட்டு நீங்கிவிடுவாள். நாயகனாவது சுற்றத்தினராவது நீக்கிவிடுவார்கள். புருஷன் கேட்டுங்கேளாதவனாயும், கண்டுங்காணாதவனாகவு மிருந்தாலும் சுற்றத்தினர் அவனையும் ஜாதிவிட்டு நீக்கிவிடுவார்கள், அவள்கைப்பட ஒருவரும் தாகசாந்திசெய்யார்கள்; நெருப்பு சுண்ணாம்பு முதலியதும் கொடார்கள். புரோகிதன், வண்ணான், பணிசெய்வோன்-அம்பட்டன் முதலினரையும் போகவிடார்கள். அதனால் மற்ற ஸ்திரீகள் மிக்கபயமுற்று விபசாரஞ்செய்யத் துணியார்கள்.

உயர்குலத்திலாவது சமகுலத்திலாவது சுற்றத்திலாவது சோரம் போகிறவர்களுக்குஷை கதியினால் தாழ்ந்தகுலத்தினரைச் சேர்ந்த ஸ்திரீகளுக்கு அந்தக்காலததில் என்னகதி நடத்தியிருப்பார்கள் அதைவிவேகிகள் தீர்க்கமாயோசிக்க வேண்டும். வேளாளசாதியில் ஒருஸ்திரீ விபசாரம் செய்வாளாகில் சந்தடி செய்யாமல் நுகத்தடியால் கொன்று விடுவதுமுண்டு. ஸ்திரீகளுக்கு இவ்வளவு கொடுமையான தண்டனையும் புருஷன் சுற்றத்தினர் அக்கம்பக்கத்தினர் முதலிய யாவருக்கும் பொருமையுமுண்டாகியது, அவர்கள் சீர்ப்பட்டுப் பதிவிரதாதர்மமுற்று நற்கதியடையவேண்டுமென்று பகவான் கடாக்ஷித்த கருணையேயல்லாமல் வேறல்ல.

ஒரு ஸ்திரீ விபசாரஞ்செய்தால் அவள் புருஷன் முதலிய பலரும் பொருமையுற்று என் தூஷிக்கவேண்டுமென்னில்? ஸ்திரீயானவள், நிலையாமனமும், புருஷனைப்பார்க்கிலும் எண்மணங்கு போகவிச்சையுமுள்ளவளென்றும் ஒருகைமாறினால் மேலும் மேலும் அயர் புருஷருக்கே யங்காந்து, உயர்விலிருக்கிற எலுமிச்சம்பழமானது உருண்டு தாழ்மையான பள்ளத்தில் விழுந்து விடுவதுபோல, வர்ணாசிரமங்கடந்து பலரையும்புணர்ந்து பிரஷ்டத்துவமடைந்து பலவியாதியும் துன்பமும் நரகமுமுற்று மிருகாதிகளான பல செந்துக்களாகப் பிறப்பார்களென்றும், மேலேறுவது அருமை என்றும், முன்னிருந்த பெரியோர்களால் கூறியிருக்கிறார்கள்.

## ஸ்திரீகள் அன்னியபுருஷனை கனவிலும் நினைக்கக் கூடாதென்பதைக்கூறுதல்.

யோசித்துப்பார்க்கையில் ஸ்திரீகள் தன்புருஷர்களிடத்தில் செய்யும்பணிவிடைகளினாலன்றோ அந்தபுருஷாள்கடைத்தேருகிறது. அதைவிட்டு ஸ்திரீகள் பாபமேதேடிக்கொள்ளுகிறார்கள். பாருங்கள் எண்ஜாண் உடம்பிற்குசிரசே பிரதானமாயிருப்பது யெல்லாருக்குந்தெரிந்தவிஷயம் அதபோல் ஸ்திரீகளுக்குச் சகலமானகுணங்க ளமைந்திருந்தாலும், கற்புநிலை தவறாமலிருப்பதுமுக்கிய ஆபரணமாயிருக்கின்றது. துர்குணத்

தால், கற்புநிலைதவராதவளுக்கு முகம் அழகு இல்லாமலிருந்தாலும், கலியாணவீட்டுப் பூமாலைபோல் அவள் யாவராலும் கனப்படுத்தப் படுவாள், கற்புநிலை கெட்டவள் அதிசுந்தரியாயிருந்தாலும், அவள் சுடுகாட்டு மாலையைப்போல் யாவராலும் இகழப்படுவாள், உலகத்தில் ஒருவனுக்குத் தீங்குசெய்கிறவன் அவனுக்குமட்டுந் துரோகியாகிறான், அன்னிய புருஷனைச் சேருகிற ஸ்திரீயோவென்றால், பலபேர்களுக்குத் துரோகஞ் செய்கிறாள், அவள் தன்னையுங் கெடுத்து. அந்த அன்னிய புருஷனையுங்கெடுத்து, தன்னுடைய சொந்தப் புருஷனுக்குந் துரோகியாகி, அந்த அந்நியபுருஷனுடைய பத்நிக்கும் பெரிய துரோகியாகிறாள். அவளுடைய துர்மார்க்கத்தால் அவளுடைய புருஷனுக்கும் அந்நிய புருஷனுடைய பத்நிக்கும்உண்டாகிற சஞ்சலமும், பொறாமையும், கஸ்தியும், துக்கமும் அபரிமித மல்லவா? அன்றியுங் (கோடாலிக்காம்பு குலத்துக் கீனம்) என்பதுபோல, கற்புநிலைகெட்டவள் தன்னுடைய உற்றார் பெற்றார் முதலியவர்களுக்கும் தன்னுடைய புருஷன் வழிச்சுற்றத்தாருக்கும் மாறாத அவமானத்தையும், இழிவையும், நிந்தையையும் உண்டுபண்ணுகிறாள். இந்த அநியாயமான உலகமானது அவள்செய்தகுற்றத்திற்காக அவளுடைய புருஷனையும் பிள்ளைகளையும் அவமானப்படுத்தி நிரபராதிகளான அவர்களையும் தண்டிக்கின்றது மற்றக்குற்றங்களெல்லாம் சிலகாலத்தில் மறைந்துபோகும், வியபசாரதோஷமோவென்றால் உலகமுள்ளமட்டும் மறையாது. அந்தவியபசாரி இறந்தாலும் அவளுடைய அபகீர்த்தி இறவாமல் யென்றுஞ் சிரஞ்சீவிப்பட்டம் பெற்றுக்கொண்டிருக்கும் மற்றக்குற்றங்களுக்கெல்லாம், ஒவ்வொரு பிராயச்சித்தமுண்டு. ஒருவனுடையபொருளைத்திருடினால் அதற்குச்சரியானபொருளைக்கொடுத்துத் திருப்திசெய்யலாம். அப்படியே நமக்குண்டாகிற நஷ்டங்களுக்கும் நாம்பிறருக்குச் செய்கிற தீங்குகளுக்கும் தகுந்த பரிகாரங்களைச்செய்யலாம், பதிவிரதா பங்கத்திற்கு ஒரு பிராயச்சித்தமு மில்லையே. (கெட்டுப்போன கற்பு எட்டுநாள் அழுதாலும் வருமா?) "அரைக்காசுக் கழிந்தகற்பு ஆயிரம்பொன் கொடுத்தாலும் வருமா?" என்று பழமொழியும் இருக்கின்

றதே, ஸ்திரீகளுக்குக் காவலாகிய நாணத்தையும் மானத்தையும் விட்டு ஒரு ஸ்திரி பரபுருஷ ஸம்போகத்துக்கு எப்போது உடன்பட்டாளோ அப்போதே அவள் எப்படிப்பட்ட அக்கிரமங்களுக்கும் பின்வாங்கமாட்டாள். பாதி விர்த்திய லோபம் பலபாவங்களை விளைவிக்கிற வித்தாயிருக்கின்றது; எப்படியெனில் பரபுருஷனைச் சேருகிற ஸ்திரி அந்தக்குற்றத்தை மறைப்பதற்காகப் பலதந்திரங்களையும், பொய்களையும், கபடமார்க்கங்களையும் உபயோகிப்பாள், அந்நிய புருஷனால் உண்டாகிற கர்ப்பத்தை அழிப்பதற்காக அவள் பலமருந்துகளை உண்டு கொலைபாதகத்தையும் கட்டிக்கொள்வாள், அவள் சிலசமயங்களில் தன்புருஷனைக்கொல்லவும் வழிதேடுவாள்; காமவிகாரத்தைத் தூண்டிவிடுவதற்காக மதுமுதலியலாகிரி வஸ்துக்களையும் அருந்துவாள். அந்தவஸ்துக்களையும் விலைக்குவாங்கவும், பரபுருஷர்கள் பார்க்கத் தன்னை அலங்கரித்துக்கொள்ளவும் கையில் பொருளில்லாவிட்டால் திருடவும் ஆரம்பிப்பாள். ஒருபாபுருஷன்போலப் பலபுருஷர்களைச் சேர்ந்து பொருள் சம்பாதிக்கவும் துணிவாள், கருடன் கால்ற்கெச்சைகட்டினது போல் வியபசார தோஷம் எப்படியும் பகிரங்கமாய்விடும். அந்தக்குற்றத்தை மறைக்க யத்தனிப்பது ஆகாசத்தைப் பாடல் கொண்டு மூடுவதற்கும், பூனை தன்கண்ணை மூடிக்கொண்டு பாலைக்குடிப்பதற்கும், சமானமாயிருக்கின்றதல்லவா.

இன்னமும்பாருங்கள் புருஷனும் - பெண்சாதியும் உயிருள்ள காலம்வரையில் அந்நியர்முகம் பார்க்கிறதில்லையென்று கலியாணகாலத்தில் தெய்வசந்நிதியில் பிரமாண பூர்வமாகச் சங்கற்பஞ்செய்து கொள்ளுகிறார்களே அந்தப்பிரமாணத்தை உல்லங்கனஞ்செய்து அந்நியசம்போகம்பண்ணுவது மகா கொடிய பாவமாகையால், அப்படிப்பட்டபாவிகள் மோக்ஷத்தையிழந்து, அவியாத அக்கினியில் யென்நாளும் பூதபசாசகணங்களால் உபாதிக்கப்படுவார்களென்றுவேதசாஸ்திரத்திற் பலவிடங்களிற் சொல்லப்படுகின்றது இந்த உலகத்திலும் வியபசாரிகள் சகலராலும் கைவிடப்பட்டு, சோரநாயகனாலுங் கைவிடப்பட்டு, தரித்திரமும் பலவியாதிகளும் துன்பங்களுங்

கொண்டு. சந்தி சிரிக்கத் திரிகிறதை நாம் கண்ணாற்பார்க்கிறோம் பின்னும் இவ்வுலகத்தில் நடக்கிறகொலைகளுக்கும் சண்டைமுதலான கலகங்களுக்கும் இந்த அகம்மியாகமானமே பிரதானகாரணமாயிருக்கின்றது. இந்தகுற்றத்தினிமித்தம் சோதங்கொமோராமுதலிய பட்டணங்களைக் கடவுள் நிர்மூலம் பண்ணியதும் யாவர்க்குந் தெரிந்திருக்குமல்லவா.

திருட்டுப்புணற்சியினா லுண்டாகிற சுகம் அதிஅல்பமாயிருக்கின்றதல்லவா? அந்தக்கிஞ்சித்புணர்ச்சியினாலுண்டாகிற ஆபத்துக்களும், பாவங்களும், பழிகளும் அபாரமாயிருக்கின்றது. பாருங்கள் ஒருவனை மதங்கொண்டயானை பின்னேதுரத்த, முன்னே புலிவந்துபாய, அவன் இந்த ஆபத்துக்குப் பயந்து ஆற்றிலேகுதிக்க; ஆற்றிலே சிலமுதலைகள் இவனைபிடித்திழுக்க, இப்படிப்பட்ட ஸ்திதியிலிருக்கிறவன் தாகத்துக்கு ஜலத்தை அள்ளிக்குடித்துச் சந்தோஷிக்கிறவனெப்படியோ அப்படியே கள்ளப்புணர்ச்சி செய்கிறவர்களுடைய நெஞ்சில் ஓயாதபயமும், நடுக்கமும, துன்பமும் சதா குடிகொண்டிருக்குமே. இவ்வளள அச்சத்தோடு அவர்கள் அடையும் இன்பம்-துன்பமேயல்லாமல் வேறல்லவே. இந்த அற்பசுகத்தைவிரும்பி மலைபோலே பாவங்களையும், பழிகளையும், துன்பங்களையும் சம்பாதித்துக்கொள்ளுகிற ஸ்திரீகள் எவ்வளவு மதிகெட்டவர்களாய் நாளைவரும் மோக்ஷத்தைத்தள்ளி நரகத்துக்காளாகி விடுகிறார்களல்லவா.

கள்ளப்புருஷனுக்குப் பெறுகிறபிள்ளைகளை அவள் தன் சொந்தப்புருஷனுடைய ஆஸ்திகளுக்குப் பாத்தியஸ்தர்களாக்குவது எவ்வளவு பெரிய அநியாயம். ஸ்திரீபுருஷர்கள் ஒருவர்க்கொருவர் உதவியா யிருக்கும்பொருட்டும், அவர்கள் பிள்ளைகளைப்பெற்று நன்மார்க்கத்தில் கொண்டுவரும் பொருட்டும், கலியாணத்தைக் கடவுள் நியமித்தருளினார். அந்தவிதிக்கு விரோதமாக உலகத்தில் வியபசாரதோஷங்கள் அதிகரிக்குமானால் புருஷனைப் பெண்சாதி மதியாமலும், பெண்சாதியைப்புருஷன் விரும்பாமலும், பிள்ளைகளைத் தாய்தகப்பன்மார்கள் பராமரிக்காமலும், தாய்தந்தைகளைப் பிள்ளைகள் பேணா

மலும், கிரகஸ்தாச்சிரம தர்மங்கள் சரியாக நடவாமலும் உலகத்திற்குப் பெரிய விபரீதம் உண்டாகுமே, ஆகையால் ஸ்திரீகள் கற்புநிலையைக் கைவிடாது காக்கவேண்டும். இதரயுத்தங்களில் சத்துருவுக்குப் பின்வாங்காமல் எதிர்த்து நிற்பவர்களே ஜெயமடைவார்கள். காமயுத்தத்திலோவென்றால் எதிர்த்து நில்லாமல் ஓடுகிறவர்களே ஜெயமடைவார்களாகையால், பெண்கள் அன்னியபுருஷர்களுடன் பேசாமலும் அவர்களைச் சொப்பனத்திலும் நினையாமலும், காமநூல்களையும், கெட்ட கதைகளையும், படியாமலும், கேளாமலும் நிர்மலமாயிருக்கவேண்டும்.

ஸ்திரீகள் துணையில்லாமல் ஒருபோதும் தனிமையாயிருக்கவும், வெளியேசென்று காரியங்களைப்பார்க்கவும்தக்கவர்களல்ல, புருஷன் வீட்டில் இல்லாதபோது அவர்கள் நற்குணமுள்ள பெண்களைத் துணைதேடி வைத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் பிராணன்போனாலும் கற்புநிலை தவறுகிறதில்லையென்கிற வைராக்கியசித்தம் உள்ளவர்களாயிருக்கவேண்டும். ஒரு அரசனுடைய கெட்ட எண்ணத்துக்கு ஒரு உத்தமி இணங்காமல் நிராகரித்தபொழுது, அவன் வாளைஉருவிக்கொண்டு (என்னை நீசேராதிருப்பாயானால் உன்னை வெட்டிக்கொல்வேன்) என்று கோபத்தோடு சொல்ல, அதைக்கேட்டு அப்பதிவிரதை அரசனைநோக்கிசொல்லுகிறாள் ஓ துஷ்டா! நீ அரசனானாலும் என் பர்த்தாவினுடைய திருப்பாதத்திலே ஒட்டியதூசிக்கு உன்னுடைய தலையிலிருக்கிற கிரீடமும் சமானமாகுமா? உன்னைச் சேரவிட்டாற் கொல்லுவேனென்று கைவாளை உருவி நின்றாய்-என்னுடைய கற்புக்குமட்டும் பங்கம்வராமல் என்னை நீ கொன்றுவிடுவையாமாகிலெனக்குத் தாயும், தந்தையும், குருவும் நீயேயென்று பிரத்தியுத்திரங் கூறினாள். இதைகேட்ட அந்தஅரசன் அஞ்சி - விலகிப்போய்விட்டான். மானத்திற்குமுன் பிராணனைத் திரணமாகயெண்ணிக் கற்பையக்காப்பாற்றின அந்த உத்தமியை மற்றஸ்திரீகள் குருபீடமாகக்கொள்ளவேண்டும்.

இக்கலியுகத்தில் அந்நியஸ்திரீகளைக் கெடுக்க உபாயஞ்செய்கிற சில புருஷர்களும் இருக்கின்றார்கள், ஆகையால்

சிலதருணங்களில் நிர்தோஷமானஸ்திரீகளுக்கும் தோஷம் கற்பித்து அவர்கள் வியபசாரிகளென்று அபாண்டமான பெய்யைக் கட்டிவிடுகிற உலகமானது வாஸ்தவத்தில் கற் பழியாத ஸ்திரீகளையும் கலந்ததுபோல பெருமையாகப் பொய்பேசுகிற புருஷர்களும் இல்வுலகத்திலிருக்கிறார்களே. இப்படிப்பட்ட புருஷர்கள் தாங்கள் வாஸ்தவமாகச்சேர்ந்த பெண்களுடைய பழியை ஊரெங்கும் பறைசாற்றாமல் விடுவார்களா? ஆகையால் அந்நியபுருஷர்களுடைய காற்றும் தங்கள் மேல் வீசாமலும், வீண்கதைகளும், அன்னியருடைய பேச்சுகளும் பேசாமலும்-கேளாமலும் சுத்த மனோநிர்மலமாய் தன் புருஷவர்க்கத்தவர்களுடைய க்ஷேமங்களைப்பற்றி விசாரிப்பவளே உத்தமியாவாள். ஆதலால் மின்னிருந்த பதிவிரதாக்களுடைய சரித்திரம் இவ்விடத்தில் கூறப்படுகின்றது.

---

## நளாயினி அனுஷ்டித்த பதிவிரதாதர்மம்.

இந்தப் பிரகாரமாக பீஷ்மர் இந்த ஸ்திரீகளினுடைய ஒழுக்கங்களை சொல்லியபோது பாண்டு புத்திரர்களின் முதல்வனாகிய தருமனந்தனர் பீஷ்மரைக் கேட்டதாவது எந்த தர்மஞ்செய்தால் மவுடிகமான ஸ்திரீகளும் அந்த ஸ்திரீகளினுடைய புருஷாளும் முக்தியடைவார்கள். மேலும் இப்பதிவிரதாக்களாய் சேர்ப்பட்டஸ்திரீகள் இந்தயுகங்களில் கடத்தேறியிருக்கிறார்களா! என்றுகேட்க, உடனே பீஷ்மர்சொல்லுகிறார்.

கேளாய்! அச்சுதனுக்கு அன்புள்ள பக்தனாகிய அறக்கடவுள்மைந்தனே இதோ உன்னருகில் நிற்கிற இத்திரௌபதி முற்ஜென்மத்தில் நளராஜனுடைய மகளாய்ப்பிறந்து, நளாயினி எனப்பெயருடையவளாகச் சிறந்து, மிகவும் சவுந்தரியத்துடனே பருவமடைந்திருந்தாள். அவளை வெகுராஜாக்கள்வந்து விவாகத்துக்காகக் கேட்டதற்கு, அந்தப்பெண் தனக்குப் புருஷன் வேணுமென்கிறபோது நான் அவளைக் கலியாணம் பண்ணிக்கொடுப்பேனே யல்லது, அதற்குமுன்னே கொடுக்கமாட்

டேனென்று சொல்லிப்போட்டான். இப்படியிருக்க அந்தப் பெண் ஒருநாள் எனக்குக்கலியாணம் வேணுமென்று பிதாவுடனே சொல்ல, பிதாவும் அதற்கு யத்தினமாயிருக்கையில் ஒருதினம் மவுத்கல்லியரென்கிற மஹாமுனி இராஜனிடத்துக்கு வந்து, ஓ மன்னவனே! நானொருகாரியமாய் வந்தேன், அதை நீ நிறைவேற்ற வேணுமென்றார். அந்த ராஜாவும் அவருடைய தபோமகிமைக் கஞ்சி மறுத்துசொல்லமாட்டாமல்!, அப்படியே ஆகட்டுமென்று ஒப்பினார். அந்த ரிஷி உன்மகளை எனக்குக் கன்னிகாதானஞ் செய்யவேண்டுமென்று கேட்க, அந்தராஜா அவருடைய முதிர்ந்த வயதையும் கோரரூபத்தையுங்கண்டு, தன் மகளுடைய மங்கைப்பருவத்தையும் நல்ல சௌந்தரியத்தையும் நிதானித்து,யோசித்துப்பார்த்து சுவாமி, அப்படியே செய்கிறேன்; ஆனால் — அந்தப்புரத்துக்குப்போய் என்மகளைச் சம்மதிசெய்து; அதற்கு அடையாளமாக அவள் முத்திரை மோதிரத்தை வாங்கிவந்தால் உடனே தத்தம் பண்ணுகிறேனென்று சொன்னான்.

அதுகேட்ட அந்த முனிவரும் ஆகட்டுமென்று அந்தப்புரத்துக்குப் போகும்போது மன்மதனை நினைத்தார். அம்மாத்திரத்தில் அவன் அவருக்கெதிரில் வந்துநின்றான். உடனேமுனிவர் அவனுடைய வயதையும் அழகையும் வாங்கிக்கொண்டு, தன் வயதையும் ரூபத்தையும் அவனுக்குக்கொடுத்து, அப்பா! சற்றுநேரத்திலே உன்சொத்தைச் சேர்த்து விடுகிறேனென்று அவனுக்கு விடைகொடுத் தனுப்பிவிட்டு, தாம் அந்தப்புரம் போய் அங்கிருந்த ராஜகன்னிகையைப் பார்த்தார். அவள் இவருடைய ரூபத்தைக் கண்டமாத்திரத்திலே மோகித்து, இவரைப் பின்னும் எறநோக்கி உற்றுப்பார்த்து, நீயார்? எங்கேவந்தீர்? என்றுவினவினாள். அவரும் தமக்கு அவளிடத்தி லிருக்கிற ஆசைவெளிப்பட, ஓ யொற்கொடியே! உன்னை விவாகஞ் செய்ய வேண்டுமென்று வந்தேன். உன்பிதா நீ சம்மதித்தால் அப்படியே செய்கிறேன் என்றான். ஆகையால் உனக்கு என்னிடத்தில் ஆசையிருந்தால், உன்மனங் குவிந்ததற்கு அடையாளமாக நீ தரித்திருக்கிற முத்திரைமோதிரத்தை என்கையிற்கொடு. அதை உன்தகப்பனுக்குக் காண்பிவித்து உன்னை

விவாகஞ் செய்துகொள்ளுகிறேன் என்று சொன்னார். அந்தப் பெண்ணரசியும் புன்சிரிப்புடனே மௌனமாய்த் தன் மோதிரத்தைக் கழற்றித் தபோதனர் கையிற்கொடுத்தாள். அவர் அதை வாங்கிக்கொண்டு, மிகவும் சந்தோஷத்துடனே வரும்போது மன்மதனை யழைத்து, அவன்ரூபத்தை அவனுக்குக் கொடுத்துவிட்டு, தம்முடைய யதாரூபத்தோடே அரசனிடத்திற்சென்று, அவன்கையில் அம்மோதிரத்தைக் கொடுத்தார். அரசனும் அதைப்பார்த்துத் தன்மகளை அழைப்பித்து மகளே! இதோ நீ இஷ்டமாய் நினைத்த புருஷன், இவருக்கே உன்னைக் கன்னிகாதானம் பண்ணுகிறேன் என்றுசொல்ல, அந்தச் சுந்தரி அந்தப் புருஷனைப் பார்த்து, நான் இச்சித்த புருஷன் இவரல்லவென்று சொல்ல, மஹாராஜனும் இவர்தான் உன் சம்மதிக்கு அடையாளமாக மோதிரங் கொண்டுவந்து என்கையிற்கொடுத்தார், இனிப்பேசியபேச்சு புரளக்கூடாதென்றான்.

அந்தப்பெண் திடுக்கிட்டு, நமக்கு அமைப்பு இதுதானென்று நினைத்துக்கொண்டு, ஐயா! ஆனால் அப்படியே செய்யுமென்று சொன்னாள். அப்பால் அந்த ராஜாவானவன் அந்த மவுத்கல்வியருக்கே நளாயினி என்னுந் தன்மகளைக் கன்னிகாதானஞ்செய்து, சிறப்புடனே விவாகத்தையு நடாத்தினான். விவாகம் நடந்தபின்பு அந்த முனிவர் இந்தப் பெண்பிள்ளையைப்பார்த்து, பெண்ணே! நீ என்னுடன் கூடியிருக்க மனமுடையவளா? அல்லது உன் தகப்பனரிடத்தில் விளையாடியிருக்கும் மனமுடையவளா? என்று கேட்க அந்தப்பெண் கற்புடையவளாகையால், சுவாமி! இனி தகப்பனு லெனக்கென்னபயன்? இப்பருவம் புருஷனோடிருக்கத்தக்கதாதலால் தேவரீருடன் கூட வருவதற்கே மனமுடையவளென்று சொல்லினள். அப்படியானால் நான் கடினமாகிய ஆரணியத்தி லிருந்து தவஞ்செய்யப் போகிறேன், அங்கே நல்ல உணவுகிடைக்காது; காய்கிழங்கு தின்னவேண்டும். மெத்தென்னுஞ் சயனமில்லை; கல்லிலும் முள்ளிலும் காட்டிலும் படுக்கவேண்டும்; திவ்வியமான வாத்தியகோஷடமில்லை; பயங்கரமான மிருகங்களின் கர்ச்சிப்பைக் கேட்கவேண்டும். உயர்ந்தவஸ்திரமில்லை;

மரவுரி புடைக்கவேண்டும். மாடமாளிகைகளில்லை; தழைகளாற் கட்டப்பட்ட குடிசைகளி லிருக்கவேண்டும். உனக்குக் காலங்களில் அன்னபானாதிகள் கிடைக்கமாட்டாது; மத்தியானத்துக்குமேற் கொஞ்சம்புல்லரிசிக்கஞ்சி கிடைக்கும். இராத்திரியிற் போசனங் கிடைக்காது. அன்றியும் விடியற்கால மெழுந்தது முதல் நமக்கு ஸ்நானம்- தேவபூசை - அக்கினிஹோத்திரம் - ஜாகார முதலான வைதீகங்களுக்கும், ஆகாரமுதலான லௌகீகங்களுக்கும், வேண்டிய உபசாரங்களாலே மிகவு மெய்வருந்த வேண்டும். நித்திரையற் றிருக்கவேண்டும். மேலும் நான் கிழவன். தவத்தில் நிற்பவன். ஒருவேளை சாப்பிடுகிறவன். உனக்குக் காமசுகம் பெரும்பாலும் நேரிடாது. இதுவுமல்லாமல் நினைத்தபோது எங்கே போகவேண்டுமோ அங்கேபோய் விடுவேன். அனேகதினங்கள் ஆகாரமே யில்லாமல் தவத்தில் நின்றுவிடுவேன். அப்போதெல்லாம் நீ ஒருத்தியாய் ஆகார நித்திரைகளில்லாம லிருக்கவேண்டும். இப்படிக்கு அதிக துக்கத்திற்கே காரணமாகியது ஆனதினால்; என்னுடன் வருவதற்கிசையமாட்டுவையோ? என்று அம்மகாமுனி சொல்லக்கேட்ட அந்தஸ்திரீயானவள் சொல்லுகிறாள். ஓஸ்வாமி! என்னகஷ்டம் நேரிட்டாலும், புருஷன் எப்படிப்பட்டவனானாலும், பதிவிரதையாயிருக்கிற ஸ்திரீகளுக்கு அப்புருஷனுடன் கூடயிருந்து கணவனுக்குச் சிசுரூஷைசெய்வதே சகலசாஸ்திரங்களுடைய விதி. இதனாலே தான் அவளுக்கு இம்மையில் நற்கதியும் நல்லின்பமும் உண்டாவதோடு, பிறந்தகுலத்திற்கும் புகுந்தகுலத்திற்கும் புகழுநடந்து, உலகத்திலுள்ள சகலமான பேர்களாலும் மகிழப்படுவாள். அப்பெண்மையே பெண்மை. சவுக்கிய முதலிய மற்றவை சுகமல்ல. பிறந்தவீட்டில் எத்தனைசெல்வமிருந்தாலும் அதனாற் பெண்ணுக்குக் கிஞ்சித்தும் பெருமையில்லை. புகுந்தயிடத்திற் குடிப்பது கூழாயினும் அருமையான பெருமைதான். அன்றியும் வருத்தத்துடனாவது கணவனோடுகூட இருக்கிறதேசுவர்க்கபதவி. அதைவிடுத்துத் தன்னிச்சைபோல நடந்து, சுவர்க்கம்புகுந்தாலும் நரகவேதனை ஆகையால், முன்னம், இராமன்பின்னே ஜனகன்மகள் போனாள். நளனுடனே

தமயந்திசென்றாள். சுகன்னி யென்பவளும் பார்க்கவச்சியவ ரோடு ஆரணியவாசஞ் செய்தாள். அரிச்சந்திரனைச் சந்திர மதி அனுசரித்தாள். இப்படி அனேகம் பதிவிரதைகள் பதி சிசுருஷை யென்னுங் கல்பத்தை அனுஷ்டித்து, என்றும் நாசமுறாத கீர்த்தியுடைமையைப்பெற்று விளங்குகின்றார்கள். இதெல்லாம் அறிந்த யான் எப்பாடுபட்டாவது தேவரீரை அனுசரித் திருப்பேனேயல்லது, பிதாவின்வீட்டுப் புசிப்பாகிய எச்சிலுக்கு இச்சிக்கமாட்டேன். என்று சொல்லக்கேட்ட அந்த ரிஷியானவர் நளாயினியை அழைத்துக்கொண்டு, கங் காநதி தீரமாகிய ஒரு புண்ணிய க்ஷேத்திரத்திற்போய்த் தம திச்சையின்படி தவஞ்செய்ய வாரம்பித்தார்.

அவளும் அவருக்கு வேண்டிய உபசாரஞ்செய்துகொண் டுவருகையில், அந்தரிஷி அவளுடைய கற்பை இன்னம் நன் ருகச் சோதிக்கவேண்டுமென்று கருதி, ஒருநாளாவது காய போகத்தைக் கொடாமற்போனதுமன்றித் தம்முடைய கிழத் தன்மையால் விகாரமுற்ற தேகத்திற் பெருவியாதியையும் வருவித்துக்கொண்டார். அதனல் அவர்தேகமானது அந்தக் கொடிய வியாதியினல் அழுகிக் குளுகுளுத்து புண்கள் வெடி த்துச் சீழ்வடிந்து, ஓர் புறத்திற் ஈக்கள்மொய்த்துத் துர்க்கந் தம்வீசி மகாகோரமான ஸ்திதியில் வந்தது. அப்பொழுதும் அவள் அருவருப்பில்லாமல், தன்பதியினுடம்பைத் தேய்த்துக் குளிப்பாட்டுகிறதும் - புழுக்களையெல்லாம் எடுத்து அப்பாற் போட்டு அந்தச்சீழ் முதலியவற்றைத் தன்வஸ்திரத்தினல் துடைக்கிறதும் - அவர் போஜனம்பண்ணின பாத்திரத்தி லிரு க்கும் சேஷங்களுடனே தா னுண்கிறதும், அவருடைய பாத முதலிய அங்கங்களை வருத்தந்தீரப் பிடிக்கிறதுமாகப் பணிவி டை செய்துவந்தாள். ஒருநாள் அவருண் ணுகிரகலத்திலே தமது பெருவிர லற்றுவிழச்செய்தார். அன்றைக்கும் புழுக்க ளோடு சீழுஞ் சிலைநீருங்கலந்து நாற்றமாய்க்கிடக்கிற அவ்விர லை எடுத்துப்போட்டு, மிகுந்த அன்னபானதிகளை அன்போடு புசித்தாள். அம்முனிவர் இதுகளை எல்லாம்பார்த்து மனதிற் மிகுந்த ஆனந்தத்தை அடைந்திருந்தாலும், இன்னமும் பார்ப்

போமென்று வெளிக்கு அவளைத் திட்டுகிறதும்-கோபித்துக் கொள்ளுகிறதும் - உதைக்கிறதும் - அடிக்கிறதுமாகவே இருந்தார். அப்படியிருந்தும் அந்தமாது மனங்கோணாமல் நடந்துக்கொண்டிருந்தாள்.

இப்படி நடந்துவருநாளில் ஒருநாள் அந்த வைதிகரானவர் தம்மனைவியைநோக்கி, அடிபெண்ணே! நான் உன்னைக் கலியாணம் பண்ணுகிறதற்குமுன்னே ஒருவியாதியுமில்லாமற் சுகமாயிருந்தேன். தற்பாக்கியவதியான உன்னைக் கலியாணஞ் செய்தபின்பு இக்கொடிய வியாதியினால் வருந்துகிறதுமன்றி, நினைத்தபோது தீர்த்தங்களுக்கும் க்ஷேத்திரங்களுக்கும்போகக்கூடாமல் இங்கேயே கிடக்கவேண்டியதாயிற்று. என்ன செய்வேன்? இது என்தலைவிதி. அடிபாபிஷ்டி! உன்னைத் தெரியாமலன்றோ விவாகஞ்செய்தேன். என்று கண்ணீருதிர்த்துக்கொண்டு விசனப்பட்டார். அதைக்கேட்ட அக்கற்புடைய மாதுசிரோமணியானவள் - ஓ சுவாமி! நீர் என் விசனப்படுகிறீர். நான் மகாபாபிஷ்டிதான். இந்த வியாதிக்குமாத்திரம் நானொன்றுஞ் செய்யமாட்டாமற் போனாலும், மற்றென்னாலாகிய பணிவிடைகளுக்கு ஒன்றுங் குறைவில்லை. ஆகையால் - தயைசெய்து தேவரீருக்கு எவ்விடத்துக்குப்போக மனமிருக்கிறதோ அதை அடியாளுக்குத்தெரிவித்தால், அவ்விடத்திற் றங்களைக்கொண்டுபோய்விடுகிறேன். தேவரீருக்குதவாத என்தேசமும், பிராணனும் இவ்வுலகத்திலிருந் தென்னலாபம்? சுவாமி! தங்கள் கருத்துக்கிசைய நான் நடந்துகொள்ளவேண்டிய பணிகட்குக் கட்டளையிடவேண்டுமென்று வணங்கிக் கும்பிட்டுகேட்டாள். அதற்கந்தமுனிவர் - அடிபெண்ணே! என்னைத் தீர்த்தங்கள்தோறுங் கொண்டுபோய் ஸ்நானம்பண்ணி வைக்கவேண்டுமென்றுரைத்தார். அக்ஷணமே அர்தஸ்திரீயானவள் அவரை ஒருகூடையிலெடுத்துத் தலையில் வைத்துக்கொண்டு தீர்த்தயாத்திரைபோகும்போது ஒருபட்டணத்திற் போய் அம்முனிவரை இறக்கினாள்.

அவ்விடத்தி லிறங்கிய முனியானவர்-ஓபெண்ணே! நான் ஒருவஸ்துவினிடத்திலே ஆசைப்பட்டேன் அது எனக்கு

இலேசிற் கிடைக்கமாட்டாதென்று விசனப்பட்டார். அது கேட்டு அவள் அது என்னவஸ்து; அவ்வஸ்து எவ்விதைப்ப ட்டதாயினும் எனக்குச்சொன்னால் கொண்டுவந்துகொடுக்கி றேன் என்றுசொல்ல. அந்த ரிஷியானவர் அதை யுனக்குச் சொல்லுவேனாகில் உன்மனதிற்கு மிகவும் வருத்தத்தை யுண் டாக்கும் என்று சொல்லினார். அதைக்கேட்டு அந்த ஸ்திரீயினி சுவாமி! உம்முடைய மனதுக்குஇஷ்டமாயிருப்பது என்மனது க்கும் இஷ்டம். தயைசெய்து சொல்லுவீராகில், அது யெந்த வஸ்துவாயிருந்தாலும் அதைமுடிக்கிறேனென்றாள். அதற்க வர் - பெண்ணே! இந்தப்பட்டணத்திற் கீழ்ப்புறவீதியில் ஒரு வேசியைக்கண்டேன் அவளை பார்த்ததுமுதல் யான் மிகுந்த மோகமாகி, மையல் தலைக்கேறினது. எனக்கு அன்னபானங்கள் கூட வெறுப்பாயிருக்கிறது, விசாரிக்குமளவில் அவள் ஒரு இராத்திரிக்கு நூறுபொன் வாங்குகிறவளாம். எனக்குப் பொ ன்னுமில்லை, அப்பொன்னுமிருந்தாலும் அவளைப் புணரும்ப டியான அழகுள்ளதேகமுமில்லை. இக்காரியம் யெவ்விதமாய் முடியுமென்று அந்தரிஷியானவர் சொன்னார்.

அந்தப்பதிவிரதை தீர்க்காலோசனை செய்து நல்லதென் று மனதில் ஒரு நிச்சயத்தையடைந்து, அந்த தாசியின் வீட்டு வாசலை விடியற்காலையிலேபோய் நன்றாய்மெழுகி, விசித்திர மாகக் கோலமிட்டு, அவர்களெழுந்திருக்கிறதற்கு முன்னமே வந்து விடுவள். இப்படியாக சிலநாள்செய்துவரும்போது, அவ் வீட்டு வேலைக்காரிகள் தங்களுடைய வேலையை ஆரோ செய் துபோகிறார்களென்று ஆச்சரியப்பட்டு தாசிக்கு அறிவித்தார் கள். அவளும்பார்த்து மிகவும் வியப்படைந்து, ஆ! ஆ! யார் நமதுவீட்டுக்குவந்து இப்படிசெய்கிறவர்களை காணவேண்டு மென்றிருக்கையில் ஒருநாள் அதிகாலையில் வழக்கப்படி செய் யவந்த அந்த முனிபத்தினியைக்கண்டு அம்மா! மஹாலட்சுமி யைப்போல் யிருக்கின்ற நீர் யார்? என் வீட்டுக்கு நீர்பணிசெ ய்வதேன்? என்ன யெண்ணங்கொண்டு அடியாளுடைய வீட் டைப் புனிதமாக்கவந்தீர்? அதனை தயைசெய்து சொல்லும் மாவென்று நமஸ்கரித்துக்கேட்க அதற்கு அந்த ரிஷிமனைவி மகிழ்ந்து, இப்படிநீஎன்னிடத்திற் காரணமின்றிஅன்புவைத்த

பிரகாரமே என்னிஷ்டத்தையும் நிறைவேற்றுகிறதானால் யான்சொல்லுவே னென்றாள். அதுகேட்டு அந்த விலைமாது அம்மா! என்னாற் செய்யத்தகும் ஊழியத்திற்குத் தடையொன்றுமில்லை. ஆதலால் தடையில்லாமல் சொல்லென்றுகேட்க, முனிமனைவியாள் - அம்மா! என்கணவன் மகானுபாவர், சகலகலைகளும் அறிந்தவர், தபோமகிமை விளங்கியவர், அவருக்குச் சிலகாலமாய் நான் புரிந்த தீவினையாலே குஷ்டவியாதி சம்பவித்தது. அவர் தீர்த்தயாத்திரையாய் இவ்வூருக்கு வந்தவிடத்தில் உன்னைக்கண்டு, மன்மதன்போருக்கு வாணனைக்கொடுத்துவிட்டு மயங்கி இருக்கின்றார். அவரது மயக்கத்தை உன்முகவிலாசத்தினால் தீர்த்துக் காப்பாற்றித் தரவேண்டுமென்று அந்நளாயினிவேண்டிக்கொண்டாள். அவ்விலைமாது அவையனைத்தையும் யோசித்து இதென்னமோ காரணந் தெரியவில்லை நல்லது உமதுபாக்கியம் எனக்குமாகட்டும் அழைத்துக்கொண்டு வாருமென்றாள்.

அதுகேட்ட நளாயினி சந்தோஷத்துடன்விரைவிற்போய் இச்செய்தியைத் தன் புருஷனுக்குத் தெரிவித்து, அவரைக் கூடையிலே வைத்துக்கொண்டுவந்து தாசிவீட்டுக்குத் தலைக்கடையில விட்டாள். அவர்-பெண்ணே! நீதெருவிலிரு நான் கூப்பிடும்போது ஓடிவா என்று சொல்லித் தெருக்கதவை மூடிக்கொண்டு, மன்மதனைநினைத்து, ஒருக்ஷணநேரத்திலே அவனழகைப்பூண்டு உள்ளேபோனார். அந்தத்தாசியும் மன்மதன்போல் விளங்கு மிவரைப் பார்த்து மோகித்து, ஓடிவந்து ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு சகலவித உபசாரங்களுஞ்செய்து, தன்படுக்கையறைக்குள் அழைத்துக்கொண்டுபோய்க் காமனுடைய பூஞ்சோலையொத்திருக்கிற ஹம்சதூலிகா மஞ்சத்தின்மீது இருத்தி, நானாவித காமோபசாரஞ்செய்து, அவருடைய சரீரத்தை இருக்கக்கட்டி முத்தமிட்டு, என்சாமீ! உம்மை உம்முடைய மனையாள் என் குஷ்டவியாதி பிடித்தவரென்று உரைத்தாள். பரிஹாசமாகச் சொன்னாளோ? தாங்கள் என்னையொருபொருளாயிச்சித்து இங்குவர நானென்னதவஞ்செய்தேன்? இப்படிப்பட்ட பாக்கியத்தை நான் எளிதிற்பெறச்செய்த அந்தப்பாக்கியவதியாரோ? வலுவில்வந்து எனக்

குக் கற்கண்டையுஞ் சர்க்கரைப்பாகையு மூட்டினளே; தன்
னுயிரையும் பாக்கியத்தையும் கொடுத்தவளுக்கு நானென்ன
பிரத்தியுபகாரஞ்செய்வேன். என் கண்ணே! உம்மை குற்றமு
டையவராகச் சொல்ல அவளுடைய நாவெப்படித் துணிந்த
தோ? என்று ஆலிங்கனஞ்செய்து காமக்கலை தாங்கினள். இக்
கபடமன்மதன் - ஓதாசிகுலமணியே! யானொரு காரணத்தி
னால் அவள் கண்ணிற்கு வியாதியுடையவன்போல தோற்றி
னேன். ஆதலால் அவள் இவ்வாறு உரைத்தனள். இந்த ரக
சியத்தை நீ வெளியிடவேண்டாம். வெளியிடுவையானால்
உன் சிரசு வெடிக்குமென்று சொல்லினர். அதற்கவள் -
சுவாமீ! அப்படியே யாகட்டும். உம்முடைய கருத்துக்கு மாறு
பட்டு நடக்கமாட்டேன். அதைக்கேட்டு அவர் அவளிடத்தில்
விடைபெற்றுக்கொண்டு நடையில்வந்து மன்மதனுக்கு அவன்
ரூபத்தைக்கொடுத்துத் தன்கொடிய வியாதியை மீட்டு மடை
ந்து, கதவைத்திறந்து பெண்ணேயென்று மெலிந்த குரலுட
னே கூப்பிட்டார். அம்மாத்திரத்திலே இந்தப்பதிவிரதை
யானவள் சுவாமி யென்று ஓடிவந்து, கூடையில் உட்காரவை
த்துத் தூக்கிக்கொண்டு வரும்பொழுது, கிருஷ்ணபக்ஷத்து
இராக்காலமாகையாலும் - ஆகாயத்தில் மேகங்கள் கம்மிக்கொ
ண்டு இடி முழக்கத்துடனே தூறலைச் சொரிந்திருந்த படியி
னாலும் - வழிதெரியாமல் அலைந்து, இராஜாவின் ஆக்கினையி
னாலே கழுவிலேற்றப்பட்டிருக்கிற மாண்டவியரென்னு மகா
முனிவரிருக்கிற விடம்சேர்ந்து, அவர்பாதம் கூடையிற்படச்
சென்றாள். அப்படிப் பட்டமாத்திரத்திலே அவருக்கு நோய்
அதிகமாகித் திடுக்கிட்டு, ஜாடையில் இவள் பெண்பிள்ளையெ
ன்று அறிந்து, பொழுதுவிடிந்தவுடனே உனது மங்கிலியம்
அறக்கடவதென்று சபித்தனர். இச்சாபம்கேட்ட ரிஷிபத்
னியானவள் இவர் யாரோ ஒரு பெரியவர், இதற்கு என்ன
செய்யலாம் என்று, நினைத்து பொழுதுவிடியாமற் போகக்
கடவதென்றுசொன்னாள். இப்படி இவளுடைய பதிவிரதா
தருமத்தினாலே எட்டுநாள்வரையில் பொழுதுவிடியாம லிருந்
தது. அதினாலே லோகமெல்லாம் தொந்திரவடைந்துநிற்கத்

தேவர்கள் இச்செயலுண்டானதற்குக் காரண மின்னதென்றறிந்துக்கொண்டு மாண்டவிய மகாமுனிவரிடத்துக்குப் போய் முறையிட. அம்முனிவர் தன்னால் ஒருவிரோதமில்லை, ஒருபதிவிரதை மகிமையினால் இப்படி நேரிட்டது. ஆகையால் அவளைக்கேளுங்களென்று சொல்லிவிட்டார்.

அதுகேட்ட தேவர்கள் இப்பதிவிரதையைக்கண்டு, தாயே! உலகம் வருந்துதே! அவ்வருத்தந்தீர பொழுதுவிடியும்படி அனுக்கிரகம் செய்யவேண்டுமென்றுகேட்க, அந்தப்பதிவிரதை ஓதேவர்களே! பொழுதுவிடியும்படி செய்தால், என் மங்கிலியத்தை யிழக்க நானேமுயல்வது நியாயமா சொல்லுங்கள் என்றுகேட்க, அதற்கு அத்தேவர்கள் - ஓஅம்மணி! இவ்வுலகத்துள் உத்தமராயினோர் தாம் எவ்வித வருத்தமடைந்தாவது பலருக்கும் நன்மைசெய்வதே நலமென்றுசொல்ல, அவள் மெய்தான். ஆகிலும் எதையிழந்தாலும் புருஷனையிழப்பது ஸ்திரீகளுக்குநலமல்லவேயென்றாள். அப்போதுமவுத்கலியரை பிரார்த்திக்க அவர் தன்மனைவியினாலேயே அதுதீரவேண்டுமென்றுசொல்ல உடனே அவளை வேண்டி மாண்டவியரிடத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், சுவாமி! இவ்விலக்குமி மாங்கிலிய மிழக்காதிருக்கும்படி அனுக்கிரகம்செய்யுமென்று வேண்டினார்கள். அவரும் அப்படியே பிரதிசாபமளித்தார். பின்பு இவளும் பொழுதுவிடியும்படி சொன்னாள். அத்க்ஷணமே பொழுதுவிடிந்தது, உலகமெல்லாம் பூசை - நைவேத்தியம் - ஸ்நானம் - சந்தி - செபம் - தபமுதலிய யாகங்களுடனே மங்களகரமாயிருந்தன. அந்தரிஷியானவர் இவளுடைய பதிவிரதாதன்மக்காச்சரியப்பட்டு இவளுக்குநல்லரூபத்தோடு காமசுகங்களை கொடுத்துஇருவரும் அழியாதபதவியையடைந்தார். இப்பதிவிரதாதர்மம் எல்லாரையுங் கடைத்தேற்றுமென்று பீஷ்மர் தருமநந்தனருக்குச்சொல்லி, பின்னுஞ்சொல்லுகிறார்.

## பதிவிரதையாய் பரலோகமடைந்த சாவித்திரிதர்மம்.

மந்திரதேசாதிபனென்னும் அசுபதி மகாராஜாவென்றொரு அரசனிருந்தான். அவன் மாளவியென்னும் தேவியுட

ன்கூடி வாழுநாளில், சகலபாக்கியமும் நிறைந்திருந்தும் புத்தி
ரபாக்கியம் இல்லாதிருப்பதினால், அவன் மனமகிழ்ச்சி குறை
ந்து வருந்தினான். அக்காலையில் நாரதமகாமுனிவர் அவ்விடம்
எழுந்தருள, அவரை அவன்கண்டு பாதபூசைசெய்துபணிந்து,
பத்தினியுந் தானும் புத்திரனில்லாக் குறையைச்சொல்லிப் பர
தவித்தனர். அவர்களுக்கு அம்முனிவர் ஆசீர்வதித்து, ஓ புனி
தர்களே! நீங்கள் சாவித்திரியைச் சரணமடைந்து நோன்பி
ழைத்தால் உங்கள்மனங் களிப்படையுமென்று அதற்குரியமந்
திர உபதேசஞ்சொல்லி, அந்நோன்பிழைக்கும் மார்க்கமும் தெ
ரிவித்துப்போயினார். அப்பால் இவர்களந்த நெறியின்வண்
ணம் நோன்புநோற்று அன்புசெலுத்துநாளையில், அந்தச்சா
வித்திரியார் பிரசன்னமாக, அதுகண்டு அவர்கள் பலவாறாக
வணங்கிப் புத்திரவரம் வேண்டுமென துதித்து பரவசமாகவும்,
அதற்கு அச்சாவித்திரி உமக்கு ஒருபெண்ணு உண்டாமென்று
அருள்புரிய, அதைக்கேட்டு மீட்டும் பணிந்தெழுந்து, தாயே!
பெண்சந்ததியில்மோக்ஷம்வருவதற்கும் இராச்சியமாளுவதற்
கும் யோக்கியப்படாதேயென்று வருந்திக்கேட்கவும், அந்தப்
பெண்ணினாற் சகல வைபவமும் பிள்ளைகளு முண்டாகுமெ
ன்று விளம்பி மறைந்து போயினள். அப்பாலரசனும் அரசி
யும் அவ்வம்மனையே ஆன்மார்த்த தெய்வமாக நினைத்துவாழும்
நாளில் மாளவியென்னும் இராஜபத்தினி கர்ப்பங்கொண்டு,
திவ்ய தேஜோமயமாகிய ஒருபெண்ணைப்பெற்று, சாவித்திரி
என்று பெயருமிட்டு, சகலசிறப்புஞ்செய்து, கரும்பைப்போல்
வளர்த்து; மங்கைப்பருவமடைந்தகாலத்தில் இந்நங்கைக்கு
இசைந்த நாயகன் வேண்டுமேயென்று அத்தந்தைதாய் இருவ
ரும் எக்கமுடையவர்களாய் எங்கியிருக்கும்நாளையில் திரிலோக
சஞ்சாரியாகிய நாரதமுனிவர் வர, அவரைக்கண்டு எதிர்க்
கொண்டு சாஷ்டாங்க தண்டனிட்டு, அருக்கியபாத்திர மாச
மன்யங்கொடுத்து, அந்தப்புரத்திற் கழைத்துவந்து சிங்காசனத்
தில் எழுந்தருளச்செய்து அரசனும் ஓராசனத்திலமர்ந்திருக்க,
மாளவிதேவிவந்து வணங்கி முனியே! எனக்கு மலடியென்
னும் வையகநிந்தையை நீக்கிய எந்தையே! என்று மனங்கு
ழைந்து விசுவாசித்துநின்றனள். அக்காலையிற் காவியங் கண்

ண்ணையுடைய ஓவியம்போன்ற சாவித்திரிவந்து, தன் தாய்தந்தையரைப்பணிந்து, பின்பு தவமுனியினுடைய தாளிணையைப் போற்றவும்; நாரதமுனிவர் அப்பெண்ணை அருட்பார்வையால் நோக்கி நீடூழிகாலம் வாழ்கவென்று வாழ்த்தினர்.

அப்போது அரசன் தன்பெண்ணைத் தழுவியெடுத்துச் சிங்காசனத்தில் இருத்திக்கொண்டு, நாரதரைப்பார்த்து, ஓ சுவாமி! தேவரீர் கிருபையால் தோன்றிய இச்சாவித்திரிக்கு, தகுந்த நாயகன்வேண்டுமேயென்று சஞ்சலப்படுகின்றோம். ஆதலால் - அவ்வெண்ணம் நிறைவேறுவதற்கு அநுக்கிரகம் புரியவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, அதற்கு நாரதர் ஓ அரசனே! "நீயுங் கணவனும் நேர்படினுந் தன் தன் விதிப்பயனேபயன்." என்று வேதவாக்கியமுள்ளதாதலால், அவரவர்கள் வினையின்வண்ணம் நடக்கும் இச்சாவித்திரியின் மனதிற்குறித்திருக்குந் தலைவனுக்கே கொடுப்பது உத்தமம். என்று முனிச்சொல்லக்கேட்ட இறைவன்மகிழ்ந்து, குமாரத்தியைப்பார்த்து, அம்மா! உன்மனதில் குறித்திருக்கிற நாயகனாரென்று கேட்க, அதற்குஅப்பெண் பருவமங்கைஆதலினால் தலைக்குனிந்து வெட்கமுற்று சற்றுநேரந்தரித்துச் சிந்தையில் நினைத்ததைத் தந்தை தாயிடத்தில் விந்தையாகச் சொல்லுகின்றாள். ஐயா! நான் சிறுபெண்ணாகிய காலத்தில் உரியதோழிமார்களுடன் பூங்காவனத்திற்போய் விளையாடும்போது, அழகும் இளமையும் ஆண்மிக்கையுமுள்ள ஒரு அரசன் குதிரையின்மேற் போகக்கண்டு, இவர்யாரென்று பாங்கியரை விசாரித்தேன். அப்போதவர்கள் சாலுவதேசாதிபதியின் குமாரன் சத்தியவானென்றார்கள். அன்றே மனதில் அவரை வரித்தேன் என்று சொல்லவும் இராஜன்கேட்டு, மனைவியுந்தானும் மனமிக மகிழ்ந்து, நாரதருடைய நளின மலர்போன்ற அடியிணையைப்போற்றி, அனந்தமுறை எத்திப் புகழ்ந்துபணிந்து, ஓ காசினி முழுவதுமறிந்து காலத்திரயமுந் தெரிந்த உத்தம சத்துவகுணனே! தேவரீர் என்சுகன்னிசொல்லிய சத்தியவானுடைய உத்தமகுணாதிசயங்களைச் சொல்லவேண்டுமென்றுகேட்கவும் நாரதர் சொல்லுகிறார். ஓ மகாராஜனே! (அந்த

அரசனானவன் அழகிற் சிறந்தவன், ஆண்மையில் உயர்ந்தவன், சத்தியநெறியிற் றலைமைபூண்டவன், உத்தமகுணத்தில் ஓங்கிய வள்ளல், நற்றவந்தருமம் நாளும் வளர்ப்பவன், கண்களிரண்டுங் கங்குல்பாய்ந்திட்ட, அன்னை பிதாவை முன்னெறிதெய்வமாகத் தொழுபவன். சத்துருவிடத்திற் றரணி முன்யாவும், பற்றறவிட்டுப் பதாதியாய்க் கானில், இன்னலுற்றிருக்கு மியல்பினனவன். இனியோர் வருடத்தில் இறந்துபோவான்) என்று சொல்லவும் இராஜனுக்கு விசாரம்வந்து, குமாரத்தியைநோக்கி, அம்மா! நாரதமுனிவர்கூறியதை கேள்வியுற்றையா? அப்புருடனைமறந்து இன்னொருபுருடனைநிதானித்துக்கொள்ளுக என்று இயம்பவும், அந்தமொழிக்கு அப்பெண் இணங்காமல், தன் முகத்தை ஒருவாறு சுளுக்கியிருக்கக்காட்டினள். அதுகண்ட தந்தையானவன் அம்மா! உன் எண்ணத்தின் வண்ணம் கலியாணஞ் செய்ய அச்சத்தியவானுக்கு அல்பாயுசாம். அவன் தாய் தந்தையரிருவருங் கண்ணில்லாதவர்களாம். அவர்கள் இராச்சியத்தைச் சத்துருவினிடத்தில் ஒப்பிவைத்துவிட்டு பதாதிகளாய் அன்னபலாதிகளுக்கும் வருந்தி ஆரணியத்திற் கஷ்டதிசையாய் வாசஞ் செய்கின்றார்களாம். அவர்கள் குமாரனை நீ விரும்பியது அநியாயம். ஆதலால் - என் அம்மணி? நீவேறுபுருடனை விரும்பிக்கொள், என்று அரசன்கூற, அதற்கேற்றபடி அன்னையும் வருந்த, அதுகண்ட சாவித்திரியானவள் முகமலர்ந்து சொல்லுகிறாள்.

ஐயா! பரந்தாமனுக் கொப்பாகிய நாரதபகவான் முன்னிலையில் நீர் கேட்டபோது, நான் வெழ்க்கத்தைவிட்டு மனதில் நிச்சயித்திருந்த நாயகன் சத்தியவானென்று விளம்பினேன். அவ்வாக்கினால் வேறொருபுருடனை இனி விளம்பக்கூடுமோ? அப்படி சொல்லுவேனாகில்- தாய்தந்தைமுதலிய சுற்றத்தாருக்குப் பழியும், பூலோகத்தில் நிலைபெற்றிருக்கும் பதிவிரதா தருமங்களுக்குக் குறைவும். அரசசெலுத்திய மநுநீதிக்கு அழிவும், எக்காலத்திலும் நீங்காத இகழ்வும், என்னொருத்தியினால் உண்டாகியதென்று இயாவரும் நிந்திப்பார்களே; அப்படி நிந்திக்க இருப்பதைப் பார்க்கிலும் இறப்பது உத்த

மம். மேலும் - (கல்லென்றாலுங் கணவன், புல்லென்றாலும் புருடன்.) என்னும் உலகமொழிக் கிணங்க மனங்குவிந்து நிச்சயித்த மகிழ்நனைவிட்டு, மற்றொருவரைச் சொப்பனத்திலும் நினையார்கள் உத்தமகுணமுடைய ஸ்திரீகள். ஆகையால், என் வினையின்வண்ணம் நடக்குமேயன்றி வேறல்ல. நீங்கள் யாதொன்றுக்கும் யோசிக்காமல் விவாகஞ் செய்து கொடுத்து விடுங்கள், என்று பிரகடனமாகச்சொல்லிவிட்டாள்.

அதைக்கேட்ட தாயும் தந்தையும் அச்சத்தியவானுக்கே கொடுக்க நிச்சயித்தார்கள். அங்கிருந்த நாரதரும் இதுவன்றோ பதிவிரதாக்களுக்கு இலக்ஷணம் என்று சொல்லி விடைபெற்றேகினர். பின்பு அரசனனவன் சாவித்திரியை பல்லக்கில் எடுப்பித்துக்கொண்டுபோய் சாலுவதேசாதிபதி வந்திருக்கும் காட்டை விசாரித்துக்கொண்டுபோய், அவ்வரசனையும், அவர் மனைவியையும் அவர்களுடைய புத்திரனையும் கண்டு மனங்குளிர்ப்புடனே சொல்லுகிறார்." ஓசாலுவதேசாதிபதியே ! உன் புத்திரனுக்கு, என்தவத்தில்பெற்ற இச்சாவித்திரியை கலியாணம் செய்து கொடுக்கவந்தேனென்று சொல்ல - அச்சாலுவதேசாதிபதியும் சம்மதிக்க, உடனே கலியாணமுடித்து வேண்டும்படியான நீதிகளை மருமகனுக்கும் - தன்மகளுக்கும் சொல்லிவிட்டு சம்பந்திகளினிடத்தில் விடை பெற்றுக்கொண்டு மத்திரதேசம் வந்து மனமகிழ்ச்சியுடன் சேர்ந்து வாழ்ந்திருந்தார்கள். இப்பால் சாவித்திரியுஞ் - அச்சத்தியவானும் ஒருவர்க் கொருவர் மகாவிசுவாசத்துடன் பாலும் - நீரும், மலரும் - மணமும், நகமும் - சதையும், சொல்லும் - பொருளும், எள்ளும் - யெண்ணெயும், கரும்பும் - இரசமும், உடலும் - உயிரும், எவ்வாறு சம்பந்தித்து இருக்குமோ அதுபோல இச்சாவித்திரியும் - சத்தியவானும் கூடிவாழ்ந்திருந்தும், அச்சாவித்திரி மாமியார் - மாமனுருக்கு யெப்படி ஊழியஞ்செய்துக்கொள்ளவேணுமோ அப்படியெல்லாம் நடந்துக்கொண்டிருக்கும் நாளையில், இந்தச்சத்தியவான் நித்தியப்படி கானகத்துக்குச்சென்று காய் - கனி - கிழங்கு - முதலானதுகள் சேகரஞ் செய்துக்கொண்டுவந்து இத்தாய் தந்தையர்களுக்கு ஊட்டி

வைத்து, பின்பு தானும் தன்மனைவியுடன் மிகுந்த காய்கிழங்குகளை புசித்துவந்தார்கள்.

அந்நாளையில் தனக்கு நாரதமுனிவர் நவின்ற வாக்கியத்தை மனதில்இருத்திவருந்தும்படியான இத்தையல் ஒவ்வொரு நாளாகக் கணக்கிட்டு, மூன்னூற்று ஐம்பத்தாறுநாள் சென்று போக இன்னும் நாலு நாள் இருக்கின்றது நமது நாயகனுக்கு ஆயுளென்று கருதி, மிகுந்த ஜாக்ரதையுடனே மாமன் மாமி உத்தரவின்பேரிற் கௌரிநோன்பு இழைக்கும்படி சிந்தித்து, வேதவிதிப்பிரகாரம் மூன்றுநாள் அன்னபான முதலிய இயாவற்றையும் நீக்கி, நித்திரையை அகற்றி மௌனங்கொண்டு பூசித்து, மூன்றுதினமுங் கழிந்த பின்பு நான்காவது நாள் உதயத்திற்குமுன் ஸ்நானஞ்செய்து, தன் கணவனைப்பணிந்து நோக்கி, தேவரீருடன் யானுங்காட்டுக்குவருகின்றேன் தடை சொல்லாமல் அழைத்துப்போக வேண்டுமென்று சொல்லினள். அதைக்கேட்ட சத்தியவான் திடுக்கிட்டு, தனக்குப் பத்தினியின்மீதிலிருக்கும் உரிமையினால் அவளைப்பரிந்துநோக்கிப் பெண்ணே! சக்தியைப்பூசித்து மூன்றுநாளாகச் சலபானமும் இல்லாது இருக்கும் நீ, இன்று பாரணைசெய்தால் நாளைக்கு அழைத்துக்கொண்டு போகிறேனென்று சொல்லினன். அப்படி சொல்லிய நாயகனைச் சாவித்திரிநோக்கி, நாளை என்பது நம்முடைய நாளோ? நமனுடைய நாளோ? அஃதின்னவிதமென நாமறியோம். அன்றியும்-கௌரிநோன்பு நோற்பவர்கள் மூன்றுநாள் உபவாசம் இருந்து, நான்காநாள் இராத்திரி தீபதரிசனஞ் செய்து, அப்பால் பாரணைசெய்யும்படி வேதவிதியிருக்கின்றது. ஆகையால் - இன்று பகற்போதைக் கழிக்கவேண்டி காட்டுக்குவருகிறேன், என்று சொல்லக்கேட்ட சத்தியவானவன் என் தாய்தந்தையினுடைய உத்தரவின்பேரில் வருகின்றதானால் வரலாம் என்று சம்மதிக்க, அதுகேட்ட சாவித்திரி அம்மாமன் மாமியாருடைய பாதங்களிற் சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு, அவர்களுடைய ஆசிபெற்று வணக்கமுடனின்று, எனக்கு ஒருவரந் தரவேண்டுமென்று கேட்டனள். அதற்கவர்கள் புளகாங்கிதமுற்று, அம்மா! உனக்குவே

ண்டிய வரத்தைக்கேளென்று சொல்ல, மீட்டும் பணிந்தெழுந்து, உங்கள் குமாரருடன் நானுங் காட்டுக்குப்போய் வருகிறேனென்று சொல்லினள். அவ்வார்த்தையைக்கேட்டதும் அவர்கள் புளகாங்கிதராய்ப் பூரித்து, நல்வினை வசத்தினால் உடம்பட்டு, புத்திரனை அழைத்து, அப்பா! உன்பத்தினி மூன்று நாளாய் உபவாசமாகயிருந்தமையால், பத்திரமாக அழைத்துக்கொண்டு போய் வெகுசலிதியில் க்ஷேமகரங்களோடும் வரக்கடவீர்களென்று வாழ்த்தி அனுப்பிவைத்தார்கள்.

உடனே அந்த ஸ்திரீபுருஷர் இருவருஞ் சந்தோஷத்துடன் வனத்திற்குச்சென்று, அங்குள்ள மலைகளும் - அம்மலையருவிகளின் பெருக்கமும் - மரங்களின் நெருக்கமும் - சோலைகளினுடைய அழகையும் பார்த்துக்கொண்டு வரும்போது சாவித்திரியானவள் பருத்துடன் நிழல்செல்வதைப் போலும் - நாடாவினுடன் நூல்செல்வதைப்போலும் - உடலுடன் உடற்சாயை செல்வதைப்போலும் - பிரியாமல் தொடர்ந்து உலாவி வந்தனள். அப்போது சத்தியவான் பற்பல கனிகளையுடைய ஒரு விருட்சத்தைக்கண்டு, அதில் எறுவதற்கு விரும்பி, அதற்குத்தன்னால் முடியாமல் தனது பத்தினியை நோக்கி, பெண்ணே! இப்போது என்கரங்களுங் கால்களுஞ் சோருகின்றன, சரீரமுழுமையும் நடுக்கங்கொள்கின்றது, இடைசாய்ந்து போகின்றது, கண்கள் சுழன்று ஒளிமழுங்குகின்றது, சுவாசந் திணருகின்றது, என்றுசொல்லி ஓய்ந்து சாய்ந்தான். அப்படி சாய்ந்த காதலனைச் சாவித்திரி தன் மடியின்மீது சிரத்தை நாட்டி, மற்ற உடல்முழுவதும் பூமியிற்படிய வஸ்திரத்தை விரித்துப் படுக்கவைத்துக்கொண்டு, பராசத்தியை உச்சரித்தவளாய் நான்குதிக்குநோக்கி எங்கியிருக்குஞ் சமயத்தில்; இயமதருமராஜனானவன் சிரத்தினில் முடியும் - செவியினிற் பிரகாசிக்குங் குண்டலமும் - வெண்டாமரை மலர்போன்ற கண்களும் - இருள் திரண்டதையொத்த உடலும் - கரத்திற் சூலபாச தண்டாயதமுங் கொண்டு, திவ்யகந்த கஸ்தூரி பரிமள மலர்மாலை இலங்க, அநேகம் எமபடர்கள் தொடர்ந்து வந்து வணங்கி விலங்க, எருமைக்கடா வாகனத்தைவிட்டிறங்கி, பதிவிரதையாகிய சாவித்திரியம்மனை நெருங்கி, அவ்வம்மனருகில்

வர உடல் நடுங்கி, சற்றுநிதானித்து மெதுவாக வந்து, தன் அதிகாரத்தைச் செலுத்தும்படியாக நினைத்து, சத்தியவானு டைய பிராணனைக் காந்தம் இரும்பை இழுக்குந்தன்மைபோற் கைக்கொண்டு தன்வாகனத்திலேறி நடந்தான். அப்படி நடப் பதைக்கண்ட சாவித்திரி தன் மடியிலிருந்த களேபரத்தின் தலையைப் பூமியில்வைத்து விட்டு எழுந்து, தலைவனையிழந்து தரணியிலிருப்பது பிணத்திற் கொப்பாகு மல்லவா வென்று சிந்தனைசெய்து, தன்கண்களுக்கு நேராகக் காணுகின்ற மகா புருடனுடன் தொடர்ந்துபோயினள். அப்போது மறலியான வன் திரும்பிப்பார்த்து, நீர் யாரம்மாவென்று வினவினன். அதற்கவள்-சுவாமி! நான் சாவித்திரி யென்னும் பெயரினள். ஆனால் என்பிராணநாயகனுடைய பிராணனைக் கைக்கொண்டு போகின்ற நீர்ஆரையயாவென்று கேட்டனள். அதற்கு நமனு னவன் நகைத்து, பதிவிரதைகளின் மகத்துவத்திற்குச்சந்தோ ஷங்கொண்டு இதனைச் சொல்லுகின்றான்.

அம்மா! நான் சம்ஹாரத்தொழில் செய்கிற இயமன், உம்முடையபதிக்கு இன்று பதினைந்து நாழிகையுடன் ஆயுள் சரியாய்விட்டது. ஆயுள்முகிந்தால் எப்பேர்ப்பட்டவர்களையும் இறக்கக்காண்ப தல்லாமல் இருக்கக் காண்பதில்லை. ஆனாற் பாபிகளாகிய பேர்களை என்னுடைய தூதர்கள் பந்தித்துக் கொண்டு வருவார்கள். புண்ணியசாலிகளை நான் வந்து கொ ண்டுபோவேன். ஆதலால் இந்தச் சத்தியவான் உத்தமனாகை யாலும், பத்தினியாகிய உமக்கு நாயகனாகையாலும், நானே வந்து கைக்கொண்டேன். பூமியில் நாமரூபங்களாகத் தோற் றியதெல்லாம் அழிந்துபோ மென்று தேவரீருக்குத் தெரிந்தி ருக்கும். மேலும் நான் தேவன். நீர்மானுடம். உம்முடைய நற்குண நற்சிந்தையினால் என்னைக் காணப்பெற்றீர். உமக்கு நிகராக உரைப்பதற்கு ஒருவருமில்லை. என்றுகொண்டாடின வனாய், நீரேன் கால்வருந்த வருகின்றீர்? இவ்விடத்திற்றானே நில்லும், நான்போகின்றேன், என்று சொல்லிச் செல்லவும், இந்த அம்மனானவள் பின்றொடர்ந்து, ஐயா! நாங்களிருவரும் இகத்தி லுடலு முயிருமாய் மிகஉரிமையோடுங்கூடி பதியென் றும் பாரியை யென்றும் பெயரில்மாத்திரம் இருபிரிவாயிருந்த

யெங்களில், உடலைமாத்திரம் விட்டு உயிரைக் கொண்டுபோ
வது ஞாயமல்லவே: என்னையுங் கூடக்கொண்டுபோவது
உத்தமம். இனி இவ்விடத்தில் யானிருந்து பிழைக்குங் காரி
யம்யாது ? என் புருஷப்பிரசாதமாகிய மஞ்சள் - குங்குமம் -
மலர்மணம் - இவைமுதலிய வெல்லாம்போய், இனிக் கைம்
பெண்ணென்றுசொல்லும்படி இவ்வுலகத்திலிருப்பதி லென்ன
பயன்?என்று இயம்பக்கேட்ட இயமன் அவ்வம்மையைப்பார்த்து
அம்மணி! ஆயுள்முடியாமல் உம்மை அழைத்துக்கொண்டு
போக எனக்கதிகாரமில்லை. நீர் என்னைத் தொடராதீர். நில்
லும்: நில்லும்: ஓ நல்லகுணமுடைய நாயகியாரே! உமக்கு
உமது புருடன் தவிர வேறுவரங்கள் எதாகிலும் வேண்டியி
ருந்தாற் கேளுந்தருகிறேன். என்று கூறியமொழியை சாவித்
திரிகேட்டு, ஆண்டவனே! என் மாமனாராகிய சாலுவராஜ
னுக்கும் மாமியாருக்குங் கண்கள் தெரியும்படியாகக் கடாட்
சிக்க வேண்டுமென்று கேட்க, அப்படியே கொடுத்தேன் என்
றுசொல்லி மறலியானவன் நடந்தான். இந்தப் பெண்ணரசி
யுங் கூடத்தொடர்ந்தாள். அப்படி தொடர்ந்து வருவதை எம
தருமராஜன் கண்டு, எனம்மா மிருகங்கள்நிறைந்த காட்டில்
ஒண்டியாக வருகின்றீர்: நீர் மெத்தவும் இளைத்திருக்கின்றீர்.
வியர்வைபெருக வருந்தி வருவானேன்? நின்றுவிடும் என்று
கூறவும் அதைக்கேட்ட சாவித்திரி சொல்லுகிறாள்.

ஓ சூரியபகவானுக்குஞ் சாயாதேவியாருக்குந் தோன்றிய
தோன்றலே! நாயகனில்லாத வாழ்வு நஷ்டமென்றும் - புருட
னையிழந்த பூவை பின்னமென்றும் - எல்லோரும் பழிக்கவும்,
என்போலொத்த பெண்களியாவருஞ் செழித்துக்களிக்கவும்,
நான் கண்ணீர்சொரிந்து தத்தளிக்கவுஞ் செய்வது உமக்கழ
கல்ல. உயிர்போன்ற நாயகன் என்னை ஒருக்காலும் வஞ்சகஞ்
செய்யார். உத்தமனே! நீர்தான் என்னைப்பிரித்து விட்டுச்
செல்லுகின்றீர். இது உமக்கு நீதியல்ல. என்னையும் மென்
புருடனோடு அழைத்துக்கொண்டு போவீராகில் உமக்குக்
கோடி புண்ணியமுண்டு என்று அடியிணைகளில் அலறிவிழு
ந்தழுதனள். அந்த உத்தமஸ்திரீயை மறலிநோக்கி, அம்மா!

அணைகடந்த வெள்ளம் அழைத்தால் வருமோ? சிருஷ்டி திதி சம்ஹாரமென்னும் மூன்றுதொழிலும் மாறுமோ? தெரிந்துந் தெரியாமல் வருந்துகின்றீர். யான்முடிவறிந்து கைக்கொண்ட உன் காதலனுடைய ஆன்மா திரும்பமாட்டாது. என்னை நீர் வெறுத்துக்கொள்ள வேண்டாம். இவ்வுயிர்தவிர உமக்குவேண்டியவர மின்னுமேதாகிலுங் கேளுந் தருகிறோம். என்று சொல்லவுஞ் சாவித்திரி பணிந்தெழுந்து, ஆண்டவனே! என் மாமன் சாலுவராஜனுக்குப் பழையபடி இராச்சிய சம்பிரமச் செல்வங்களெல்லாங் கிடைக்கும்படியாக அருள்புரியவேண்டுமென்று வேண்டினள். அதற்கப்படியே கொடுத்தோமென்று சொல்லித் தென்றிசைக்குக்கான் நடக்க, சாவித்திரி அவ் வியமனிடத்தில் இரண்டுவித வரம்பெற்ற இனிமையினால் இரக்கமுள்ளவரென்றுதெரிந்து, அவரைமீட்டும் விடாமல் அடர்ந்து நெடுந்தூரம்வரையில் அவனைத் தொடர்ந்து போவதாயினள். அதுகண்ட காலமூர்த்தி தனது வாகனத்துடன் நின்று தாயே! ஏனிப்படி வருந்திவருகின்றீர்? நாமொரு உறுதி சொல்லுகின்றேன் கேளும். இப்பூமியில் தந்தையின் கருப்பத்தி லிரண்டு மாதமும், தாயின் கருப்பத்திற் பத்துமாதமுமிருந்து, இவ்வுலகத் துதயமாகின்ற மானிடர்கட்கும் - மற்ற உயிர்களுக்கும் - ஜன்மிக்கும்போதே ஆயுளிவ்வளவென்று நிச்சயித்திருக்கும். அது என்னுடைய கணக்கில் வந்துவிட்டு பிறகு நான் காலம் பார்த்திருந்து, எவர்களெப்படி துன்புற்ற போதிலுங் கொண்டுவந்து அவரவர்கள் நன்மைதீமைக்குத்தக்கதாய் நடாத்துவேன். தேவர்களாலும் மற்றியாவர்களாலும் விதித்தவிதியினைத்தள்ளி நடக்கக்கூடாது. இத்தேகம் வினையொழிந்தால் அரைநிமிஷமும் நிற்காதென்று மேலோர்கள் சொல்லுமொழியை நீர் கேள்வியுற்றது மில்லையோ? ஆகையால் எவர்கட்கும் வந்த வேலைதீர்ந்தால் இங்கு என்னகாரியம்? நீரிதை மறந்து உமது காதலனை நாடுகின்றீர். நானும்நாடி, நீரும் நாடுகிறதிற் காரியமில்லை. என்னாலாவது ஒன்றுமில்லை. தேவரீர் மனதைத் திடஞ்செய்துகொண்டு திரும்பும். என்னை நீர் பின்பற்றிவருதல் உத்தமமல்ல. எனக்குச்செல்ல விடைதாருமென்றனன்.

அதுகேட்ட குணவதியானவள் தீர்க்கதெண்டஞ்செய்து, தெய்வமே! மலையினுயர்வு மலைக்குத் தெரியாதென்பதுபோல் தேவரீருடைய வல்லமையைத் தேவரீர் தெரியாமற் பேசுகின்றீர். யான் சிறியவளானாலும் அசுபதி மஹாராஜனுடைய புத்திரி, சாவித்திரி என்னும் பெயரினையுடையவள், என்தந்தையினிடத்திற்கு நித்தியம் வரும்படியாகிய உத்தமர்களைப் பணிந்து, முத்தொழிலின் பிரதாபத் தன்மைகளைச் சற்று உணர்ந்திருக்கின்றேன். அவைகளிற் சாத்துவிக குணத்தைக் கொண்டு பிரமதேவர் இவ்வுலகத்தைச் சிருஷ்டிக்கவும், இராசத குணத்தைக்கொண்டு மகாவிஷ்ணு தேவர் இரட்சிக்கவும், தாமத குணத்தைக்கொண்டு தேவரீர்சம்ஹரிக்கவும் இருக்கின்றமையால், மற்ற இரண்டுகுணமூர் தேவரீரைவிட்டு நீங்கினதில்லை. ஆதலால் உமக்குமேலாகியதெய்வங்களுமில்லை. இந்த மூன்று தொழிலும் உம்மால் நடக்குமென்று உயர்ந்தோருரைக்க உணர்ந்திருக்கும் இயான், சம்பத்து முதலியவற்றை விரும்பாமல் என் புருஷனுடன் என்னையுங் கொண்டுபோகும்படியாய் உம்மைச் சரணமடைந்தேன். ஓ கருணைக்கடவுளே! என்னிஷ்டப்படி நிறைவேற்ற வேண்டுமென்று வணங்கினள். அப்படி வணங்கிய கன்னியை அந்தகன்நோக்கி, தாயே! உம்மைக்கொண்டு போகுங்காலம் இன்னும் பின்னால் இருக்கின்றது. இப்போது கொண்டுபோவதற்கு என்றால் இல்லை. ஆதலால் உமக்குவேண்டிய வரம் இன்னும் ஏதாகிலுமிருந்தாற் கேட்டுக்கொள்ளும் தடையில்லாமற்றருகிறேன் என்று கூறக் கேட்ட அப்பொன்னனையாள் அவனைப் போற்றிசெய்து, சுவாமி! என் தந்தைக்குச் சிந்தை குளிரும்படியாக நூறுமைந்தரைத் தந்தருள வேண்டுமென்று கேட்டனள். அதற்குமவன் தந்தேன்: தந்தேன், என்றுமொழிந்து, இந்திரஜாலத்தைப் போல் அந்தரத்தில் மறைந்துபோயினன். அப்பாற் சாவித்திரியானவள் சிந்தைகலங்கி, வந்தவழி தெரியாமல் மயங்கி, தருமமூர்த்தி எந்தவழி மறைந்தார் என்று ஏங்கி, தென்திசையையுநாடி, ஓட்டமும் நடையுமாக ஓடிவருவதாயினள். அதை அந்தகன் கண்டு மனந்தாளாமல், முன்ன மார்க்கண்டேயரால் தனக்கு நேரிட்ட விபத்தையாலோசித்து, தன்னுடைய வாகன

முங் காலெழாமல் நிற்பதைக்கண்டு, மகாபதிவிரதைகள் மன நொந்தால் எதாமோ ? எப்படி விளையுமோ ? என்று நைந்து, அச்சாவித்திரி கண்ணுக்குத் தோன்றினன். அப்படி தோன்ற லும் அப்புண்ணியசாலி கண்டு தெண்டனிட்டுநிற்க, அவளைப் பார்த்து எமதருமராஜன் சொல்லுகின்ருன்.

ஒ புண்ணியஸ்வரூபியே ! இவ்வுலகத்தில் எத்தனைபேர் வைதாலும் வயிறெரிந்தாலும் பயப்படாதநான், உமக்குப்பயப் பட்டேன். ஏனென்ருல் - கற்புடையதேவியான நீர், சிங்கங் கள் - புலிகள் - யானைகள் - கரடிகள் - செந்நாய்கள் -இவைக ளோடு துட்டவேடுவரும் நிறைந்திருக்குங் காட்டில் ஒன்றியா வருவது ஞாயம் அல்ல, உம்மைநான் விடப்போவதுந் தரும மல்ல, மேலும் - நீர் கேட்டுக்கொண்ட வரங்கள் எல்லாங் கொடுத்தும், இன்னமும் என்னைத்தொடர்ந்துவருவது முறை மை அன்று, தாயே! மலரைக் கசக்கி மணங்கொள்வா உண்டோ ! அதிக ஆசை அதிகநஷ்டம், இதையறியாமற் பே ராசைகொண்டு என்பின்ல் வருவது, தருமவிருத்தம், வீண லோசனைவேண்டாம். நில்லும், என்று சிறிதுகடிந்துசொல்ல வுஞ் சாவித்திரி நமஸ்கரித்து, சுவாமி! இப்போதுதான் எனக்கு நல்லகாலம் பிறந்தது, என்பேரிற்கோபம் வராதவரையிலும் நான்பிழைத்திருந்தேன். உமக்குக்கோபம்வந்தபடியால் நானும் என்புருஷனுடன் கூடவந்து கூடிவாழ்வேன். என்ற வார்த்தையைக்கேட்ட நமன் குலுங்கநகைத்து, ஓ அம்மணி! உன்னுடையகருத்துதான் என்னவென்றுகேட்க, அதற்குச் சாவித்திரி அவரைத்தொழுது ஐயா! உங்களைப்போலொத்த உத்தமர்களை தெரிசித்தால், சகலவினைகளும் தீர்ந்து சௌபா க்கியவதி யாவார்களென்று வேதபுராணுதிகள் முறையிடும் போது, எவர்களுக்கும் தெரிசனமாகாத நீங்கள் எனக்குத் தரி சனமானதுமல்லாமல், உம்முடன்வார்த்தையாடிவரமுங்கொடு த்திருக்கின்றீர். அப்படியிருக்க - நான் அமங்கலமாக இருந் தால் இவ்வுலகத்திலிருக்கும் பெரியொர்க ளெல்லாம் நிந்திப் பார்களல்லவா? ஓ தேவனே? எனக்குவேண்டியவரங் கொடுத் தோமென்று சொல்லுகிரீர். தேவரீர் எனக்கு புன்புகொடுத்

தருளிய மூன்றுவரத்தைவிட இன்னமுமேலாகிய பாக்கியங் களைகொடுத்தாலும், பிரேதத்திற்குப் பூமாலையோடு பொன்னா பரணங்களைப் பூட்டிப் பார்ப்பதுபோல் இருக்குமே தவிர, என்னபலனைக்கொடுக்கும். ஒ இறைவனே தயைசெய்து என் புருஷனை விடுப்பீராகில், நீர்கொடுத்த பாக்கியமெல்லாம் பிர யோசனப்படும் என்று அந்த எமதரும மூர்த்தியை மெழுகு போல் கரைந்துருகி வணங்கிப்பிரார்த்தித்தாள்.

அப்போது அந்த அந்தகர் தாயே! நீர் சிறந்த உத்தமியா தலால் உமது எண்ணத்தை நிறைவேற்றிக்கொண்டீர், மெத் தவும் மகிழ்ந்தேன், இப்பவும் உம்முடைய நாயகன் பிழைக் கவும், வரம் தந்தேனென்றுசொல்லி மறைந்துபோயினர். அதுகேட்ட சாவித்திரியம்மன் அகமகிழ்ந்து, சாஷ்டாங்கமா கத்தெண்டனிட்டுக்கொண்டு, தன்புருஷன் யிருக்குமிடத்தில் வந்து உட்கார்ந்து, புருஷனுடைய சிரத்தையெடுத்து மடிமீ துவைத்து முகத்தைப்பார்த்துக்கொண்டு இருக்கும்போது, அச்சத்தியவான் நித்திரைநீங்கி எழுந்தவனைப்போல் எழுந்து, தன்னுடைய ஸ்திரீயினுடைய முகத்தைப்பார்த்து, ஒ பெண் ணே! நான் அயர்ந்து நித்திரைசெய்துவிட்டேன். நீயேன் எழுப்பவில்லை. பகல்பொழுது போய்விட்டதே; தாய்தந்தை யர் வருந்துவார்களே, ஒ அருந்திக்குச் சமானமாகிய பெண் ணே! ஒரு திவ்யபுருஷன் என்னைக் கொண்டுபோகவும், ஒரு ஸ்திரீயானவள் பின்தொடர்ந்து பிரியவசனஞ்சொல்லி மீட் டுக் கொண்டுவரவும், சொப்பனங்கண்டு விழித்துக்கொண் டேன். இஃதென்னகுறிக்கோ தெரியவில்லை யென்று சொ ல்லினன். அம்மொழியைக்கேட்ட சாவித்திரியானவள் நாய கன்முகத்தைநோக்கி நகைத்து, நீங்கள் கண்டது கனவல்ல, நிசமாகிய காரியம். நாளைக்கே உம்முடைய நகரஞ்சேர்ந்து இராசரீகஞ் செய்யப்போகின்றீர்கள். குறைவு ஒன்றுமில்லை. எழுந்துவாரும் என்று சொல்லி அழைத்துக்கொண்டு இருவ ரும் வேகமாக நடந்துவந்து பசியினால்வருந்திக்கொண்டிருக் கும் அம்முதியோரிடத்துக்குவந்து யெடுத்துவந்த காய்கனி களை யூட்டி உபசாரங்கள்செய்து, சாஷ்டாங்கமாகத் தெண்

டனிட்டு, தாய்தந்தையருக்கு கண்கள் தெரிவதைக் கண்டு சந்தோஷங்கொண்டார்கள். உடனே அத்தாய் தந்தையர் மைந்தனையும் மருமகளையும் வாரி அணைத்து, மடிமீது இருத்தி முத்தமிட்டு, காலமேபோன நீங்கள் இதுவரையிலும்வராமலிருந்த காரணம் யென்னவென்றுகேட்டனர். அதற்குச் சாவித்திரி சொல்லுகிறாள். ஓ மாமா ! மாமி ? நான் அசுபதி மஹாராசனுக்கும் - மாளவதேவிக்கும் வரத்திற்பிறந்து வளரும்போது, குதிரையின்மீது வந்த உங்கள்புத்திரனாகிய இச்சத்தியவானைக்கண்டு, இவரே நமக்கு நாயகனாகவேண்டுமென்று எண்ணமுற்றிருந்தேன். அதுகாலையில் எங்கள்தந்தைதாய் இருவரும் விவாகஞ்செய்ய எத்தனித்தபோது, நாரதமஹாமுனி சாட்சியிற் சத்தியவானே நாயகன் என்று சித்தமாகச்சொன்னேன். அப்போது நாரதபகவான் என் தந்தையைப்பார்த்து, இன்னும் ஒருவருஷம் இருக்கிறது அந்தப்பிள்ளைக்கு ஆயுள் அப்பால் இறந்துபோய்விடுவான். என்று சொல்லினர். அப்படி சொல்லக்கேட்ட என் தந்தையும் தாயும் என்னை வேறேபுருஷனை நேமித்துக்கொள்ளச் சொன்னார்கள். அதற்கு நான் சம்மதிக்காமல், அவரே நாயகன் - நானேநாயகி, என்று சொல்லினன். அப்போது என் தாய்தந்தையர் கோபங்கொண்டு, பந்துக்களுடன் கானகத்திற்குவந்து உங்களைச்சம்மதப்படுத்திக் கலியாணஞ் செய்துவைத்தார்கள்.

இப்படியிருக்க - அன்றுமுதல் இன்றையவரையிலும் மூந்நூற்றைம்பத்தாறு நாளுங்கழிந்து, மூன்றுநாள் கௌரியைநோக்கி விரதமிருந்து, இன்று கடைசியாகிய நான்காவது நாளாகையால், உங்கள் உத்திரவின்பேரில் காட்டுக்குப்போகிற கணவனுடன் கூடப்போய், என் புருஷனுடைய பிராணனை வாங்கிக்கொண்டு போகின்ற இயமதருமராஜனைக் கண்டு வணங்கி, என்னையுங்கொண்டுபோம் ஐயனே என்று வருந்தினேன் வருந்திய எனக்கு அவர் மூன்றுவரமுங்கொடுத்து, என்றுபகனுயிரையும் தந்தருளி மறைந்துப்போயினர். பின்பு யான் அவர் சென்ற திக்குநோக்கித் தெண்டனிட்டுத் திரும்பி, என்கணவனுடன் கூடி இவ்விடம் வருவதற்குப் பொழு

துபோய்விட்டது. தேவரீர்கள் கோபங் கொள்ளவேண்டாம் என்று சொல்லிய புண்ணியமருமகளை மார்போடணைத்து மகிழ்ந்தார்கள். அந்தக்காட்டில் வாசஞ்செய்யும் ரிஷிகள் ரிஷிபத்னிமார் இயாவருமச்சாவித்திரி மகத்துவங்கேட்டு நடுநடுங்கி, அற்புதம்! அற்புதம்!! என்று ஆச்சரியங்கொண்டு இப்படியும் பதிவிரதாக்க ளுண்டோவென்று தங்களைத் தாங்களே இகழ்ந்துகொண்டார்கள். அக்காலையில் மாமனாரும் மாமியாரும் மருமகளுடைய மகத்துவங்களை நினைந்து நினைந்துஉருகி, ஓ அம்மணி! ஓ மனோன்மணி! ஓ உருக்குமணி! ஓ தெய்வசிகாமணி! ஓ சிரோமணி! ஓ சிந்தாமணி! ஓ மாசிலாமணி! நீ எங்களுக்கு மருமகளாய் வாய்த்தபோதே இனி யாதொரு குறைவுமில்லை. எங்கட்கு கெட்டுப்போய்விட்டகண்ணை வரும்படி செய்த என்கண்மணியே! நீங்கிப்போன பாக்கியமும் ஓங்கச் செய்த சத்தியவாக்கியமே! என்று மகிழ்ந்து புகழ்ந்து வாழ்த்தவும், தேவர்கள் புஷ்பமாரிதூவவும், இத்தன்மையாகிய சந்தோஷத்துடன் அவ்வனத்திற்றானே சிலநாள் வசித்துக்கொண்டிருந்தார்கள்.

இப்படி இருக்கு நாளையிற் சாலுவதேசத்தைச் சண்டையிட்டுச் ஜெயித்த சத்துருவானவன் இறந்துபோய், பட்டினத்திற்கு அரசனில்லாமையாற் பழையமந்திரிமார்கள் இயானையை அலங்கரித்துக்கொண்டு தங்கள் இராஜனை இச்சாலுவதேசாதிபதி யிருக்குங் காட்டிற்குவந்து, அவ்வரசனைக்கண்டு அடிவணங்கி, சத்துருவுக்கு நேர்ந்த சம்பவத்தைக்கூறி, உடனே அவ்வரசனை இயானையின்பேரி லெடுப்பித்துக்கொண்டு, இராசபத்தினி - புத்திரன் - சாவித்திரி இவர்களை வாகனங்களிலேற்றி, இராஜசின்னங்களெல்லாம் புடைசூழ்ந்து வரும்படியாகக் கொண்டுபோய்ப் பட்டினபிரதேசஞ் செய்துவைத்து, அரண்மனையை அலங்கரிப்பித்துப் பட்டாபிஷேகமுஞ் செய்து முன்போல சிங்காசனத்திலிருந்து துரைத்தனஞ் செலுத்தும்படியாகச்செய்தார்கள். இந்தச் சாவித்திரியினுடைய தந்தை அசுபதிராசனும் நூறுபிள்ளைகளைப்பெற்றுக்கொண்டு செல்வங்களிற் சிறந்து அனேககாலம் மகிழ்ந்துவாழ்ந்திருந்து,

சாவித்திரி முதலான புருஷவர்க்கத்தைச் சேர்ந்தவர்களும,
தன்னுடைய தாய்வம்சமாகிய அசுபதிராஜன் முதலானவர்க
ளும் எந்நாளும் குறைவுபடாத சொர்க்க பதவியையும் அடை
ந்து சூரிய சந்திரர்க ளுள்ளபரியந்தம் இப்பதிவிரதாதர்மத்தி
னால் புகழையடைந்தனர்கள். கேளும் தருமநந்தனா! நல்லகு
லத்தில் பிறந்தும், கோபம் நீங்கியும், நற்குண நற்செய்கை
யிற் சிறந்தும், உலகம் பழிப்பதற்கு இடங்கொடாமலும், சத்
திய விரதங்கெடாமலும், நாயகனே ஈஸ்வரனென்றும், தாய்
வீடு முதலான அண்டை அசலிற் செல்ல இச்சைகொள்ளாம
லும், தன்முன்தானையே தனக்குக் காவலாகக்கொண் டிருக்கு
முத்தமியே பதிவிரதையாவாள் என்று சொல்லி ஸ்திரீகள்
நடக்கவேண்டிய ஒழுக்கத்தையும் சொல்லுகிறார்.

## உத்தம ஸ்திரீகள் நடக்கவேண்டிய நல்லொழுக்கத்தைப்பற்றிக் கூறுதல்.

கேளும் ஐவர்முதல்வனே! தெய்வலோகக் கற்பக விரு
க்ஷத்தினிழலில் விநோதவேடிக்கையாகப் பாக்கிய போக்கிஷ
மென்ன வீற்றிருந்த சாந்திலையென்னும் பதிவிரதா ஸ்திரீயா
னவளை, பூமியிற் சிறந்த பொன்மலைப் பக்கத்தில் வாசம்பண்
ணுங் கைகை யென்கிற கற்புடைய ஸ்திரீயானவள் கண்டு,
அந்தச்சாந்திலையினுடைய நன்னெறியை உட்கொண்டு, முன்
னாடிவணங்கி, அம்மா! நீர் புண்ணியலோகம் பெற்றுக் கண்
ணியமா யிருப்பது என்னத்தினாலே? அந்த விபரத்தை யெ
னக்குச் சொல்லவேண்டுமென்று விளம்பினாள். அதற்குச்சாந்
திலை கைகையைநோக்கிச் சொல்லுகிறாள். எனக்கு இப்பேர்ப்
பட்டகதி எப்படி வந்ததென்றால்? பதிவிரதா தன்மத்தினால்
வந்தது. மகத்துவமுள்ள பதிவிரதா தர்மத்தின் வரவாறு
எப்படி யெனில்? நான் எனது மாமியாருக்கும் மாமனாருக்கும்
வழிப்பட்டு அன்புபாராட்டி, நாளுக்குநாள் அதிக மரியாதை
உபசாரங்களை இயற்றி, அவர்கள் ஒருபொருளைக் கேட்குமுன்
னமே விரும்பிக்கொடுத்து, அவர்களுடையபாதங்களைவிளக்கி,
அறுகு - அட்சதை - புட்பம் - இவை முதலியவற்றால் பூசை
செய்து அர்ச்சித்து, தூபதீபங்காட்டி, பிரதட்சண நமஸ்கார

பண்ணி, ஆசீர்வாதம்பெற்று, பாதங்களிற் சூட்டிய அட்சதை புஷ்பங்களை அவர்கள் கையால் வாங்கிச் சிரசின்மேலணிந்து, வணக்கமிணக்கமாய்க் குணக்கேடின்றி யிருந்து, மரியாதையுடன் பிணக்கமில்லாமற் சொன்னபடி கேட்டு, உண்டிமுதலிபன வேண்டியமட்டும் பரிந்தளித்து, அவர்கள் கால் - கை - மேல் - இவை முதலிய பக்கங்களில் நேரிட்ட வலியகலப்பிடித்து, வஸ்திரங்கள் அழுக்கில்லாம லளித்து; தாம்பூலத்தை நருக்கிக்கொடுத்து, அரித்த தலை - எரித்த முதுகு-இவை முதலிய வருத்தங்களைந்து, வயிற்றிற்பிறந்த பெண்போல் வாஞ்சித்து, எதிர்த்து உத்தரம் பேசாமல், பொறுத்துப் புகழ்ந்து புறங்கூறாவிரதம் பொருந்தி யிருந்தேன். மேலும் சகலபுவன கர்த்தாவுக்கும் - தென்புலத்தாருக்கும் - விருந்துவந்த அதிதிகளுக்கும் - சில்லறையாகிய இல்லறதேவதைகளுக்கும் - பூசை நைவேத்திய முதலிய உபசாரங்கள் பண்ணி, பலபண்டபதார்த்தங்களும் - பட்சண விதங்களும் - பழவர்க்கங்களும் - அறுசுவை யுண்டியுடனளித்து, முகமலர்ந்து இனிமையுரைத்து அகமகிழ்ந்தேன். வீட்டுவேலைக்கு மிஞ்சினவேலை யில்லையாதலால் இதுவே பிரதானமென் றெண்ணி, தேகவருத்தம் - சோம்பல் - தூக்கம் - இளைப்பு - ஆயாசம் - இன்பம் - துன்பம் - எதுவும் பாராமல், இரவும் பகலும் எமாறாமல், என் வீட்டுவேலையை இன்னொருத்தர் கையிற்கொடாமல், என்னால் இயன்ற மாத்திரஞ் செய்வேன்.

மேலும் - அவ்வீடு - வாசல் - திண்ணை - தெருப்புற முதலிய இடங்களில், எச்சல் - துப்பல் - ஈளை - தூசு - தும்பு - குப்பை - கூளமிராமல் விளக்கி, பசுவின்சாணத்தாற் சமமாய் மெழுகி, கோலமிட்டு, வாசற்காலுக்கு குங்குமப் பொட்டிட்டு, பூமாலை கோர்த்திட்டு, மாவிலை ஆர்த்திட்டு, பார்த்தபேரியாவரும் என்ன லட்சுமிகரமா யிருக்கிறதென்று சொல்லும்படிக்குப் பரிசுத்தப் படுத்துவேன். வீண்பேச்சுகளும், பிறரேச்சுகளும் பேசேன். விருதாமனிதருடனும் உறவாடேன். காலை நீட்டிக்கொண்டு கதைகாரணம்பேசி, அம்மானை - கழங்கு - பள்ளாங்குழியாடி, வந்தபேர்களைப் போகிறபேர்களை உட்காரவைத்துக்கொண்டு விண்ணணம் நீட்டி, வீணாகியடம்பங்காட்டி,

புருஷன்-மாமனார் - மாமியார்-பிள்ளைகள் இவர்கள் செத்தால் அழுகிறதற்கான பாட்டை ஆராய்ந்துகற்று, சுபசோபனாதிக ளுக்குச் சொல்லும்படியாகிய மங்களவாலிகளைக்கூறி, புனந் தான்றாது - அல்லியரசாணிகதை - நல்லதங்காள் மாலை - கன் னகிகாதை - இப்பேர்ப்பட்ட சில்லறைச் சரித்திரத்தைக்கே ட்டு, இந்நீட்டுப் பாட்டுக்கு வீட்டிலுள்ள அரிசி - மிளகு-மிள காய் - உப்பு - புளி-சாறு - சோறு - துணி மணிகளைக் கொடு த்து, யாவரிடத்துஞ் சிரித்து விளையாடி, ஒகொடியமான வார் த்தைகளாடி. ஒருகுகொண்டை சொருகுகொண்டைபோட்டு, அதில் மலர்மாலைசூட்டி, அந்தக் கொண்டைசரிய தன்னொத்த பெண்டுகள் தோளின்பேரிற் சாய்ந்து, உரிய ஆண்மகனில்லா தபோது அலங்கோலமாய் ஆடிப்பாடி, புகையிலை - பாக்கு - வெற்றிலை-இவைகளை ஒருவருக்கொருவர் மாற்றி, பூமலேற்றி எமாற்றி, ஊருப்பேச்சு - நாட்டுப்பேச்சு - ஒருவனைவிட்டொ ருவனைத் தொடரும் எச்சு - இவைகளைப் பேசிக்கொண்டு, பெருமூச்சுவிட்டுத் தூங்கி, வீட்டுவேலையை வேலைக்காரர்-வே லைக்காரிகள் - வெள்ளாட்டிகள் - வெறுவியர்-இவர்களைப் பார் க்கச்சொல்லி, ஆக்கச்சொல்லி, சுசிமுதலியது மில்லாமல், பண்டம் போவது வருவது தெரியாமல், பறவாபண்ணாமல், புருடன் முதலியபேர்கள் வந்தால் வேலைக்காரியைக் கூவிச் சோறுபோட்டு வட்டியென்று சொல்லி, தாங்கள் அண்டை அசலுக்குப்போகிறபெண்டுகளாகிய வண்டர்களைப்போல் என் னுயிரொழிந்தாலும் - உடலழிந்தாலும்-ஒருக்காலும் இப்படிச் செல்லா நடக்கமாட்டேன்.

ஓ கைகையே ! எனக்குத் தெய்வஸ்தலம்-தேவாதிக ளு லகம் - குருவாச்சிரமம்-மோட்சவீடு - இவையெல்லாம் நானி ருக்குங் குடிசைதான். இதைவிடவேறேயிடம் போயறியேன். சர்வேஸ்வரன் நம்மை இல்லறமங்கையாக ஏர்ப்படுத்தி, வீடு தேடிவந்த அதிதி - அப்பியாகதி - பிதுர்க்கள் - இவர்களுக்கு உபசரியென்றும், பர்த்தாவுக்கு ஊழியப்பணிவிடைபுரிந்திடுகெ வென்றும், இல்வாழ்க்கையி லிருந்தே கடைத்தேறென்றும் விதித்தது; அப்பால் மோட்சவீட்டை யளிப்பதற்கு அடையா ளமா யல்லவோ ? ஆதலால் - இந்தக் குடிசைவீட்டைக் கோ

கனகபுரமா யுன்னி, நமக்குக் கோவில்-ஸ்தலம்-குளம்-தர்மம்-இவைவயெல்லாம் வீட்டைச்சுத்திசெய்து ஆசாரமாய் வைத்திருந்தால், அதுவேயுவையெல்லாமா யிருக்குமென் றெண்ணிச் சந்தோஷித்திருப்பேன். நான் கலியாணஞ் செய்துகொண்டு மாமியார் வீட்டுக்கு வந்தபிற்பாடு தெருவாசற்படியிற்போய் நின்றறியேன். என் புருடனும் என் பெரியோர்களுந்தவிர அயற்புருடருடனும் பூவையருடனும் அண்டிப்பேசி யிருக்க மாட்டேன். உதயத்திற்கு முன்னெழுந்து, மலசலாதிகள்கழித்து, தந்தசுத்திசெய்து, நாக்குவழித்து, வாய்கொப்புளித்து, தெருவாசல் வீடெல்லாந் திருத்திப்பெருக்கி, மெழுகி மொக்கிட்டு, பாத்திரஞ் சுத்திபண்ணிவைத்து, விழுப்பாகிய பாண்டங்களை விலக்கி, ஸ்நானமாடி, நித்தியவிதிநேமங்கூடி, சூரிய நமஸ்காரஞ்செய்து, ஈஸ்வரபூசை முடித்து, இஷ்டதெய்வமாகிய நாயகனது படுக்கைவீட்டினிற் புகுந்து, அவரது நித்திரையைநீக்கி, அவருக்கு நடத்தவேண்டிய உபசாரங்க ளெல்லாங் குறைவில்லாமல் நிறைவாகச் செய்து, அவரனுஷ்டிப்பான வுடனே பத்திரம் - புட்பம் - ஜலம் - அறகு - அட்சதை - தூபதீபம் - நைவேத்தியம்- இவைகளை எடுத்துப்போய் மாமி மாமனாரை எழுப்பி, அவர்களுக் கிருமலவுபாதி கடத்தி, பல்விளக்கவைத்து, ஆசனமமைத்து, அதன்மே லிருத்தி, நான் ஜலம்விடவும்-என்புருடன் அவர்கள் பாதத்தைத் துலக்கிப் பத்திர புட்பஞ் சாத்தவும் நான் தூபதீப மேற்றவும் - என்புருஷன் நிவேத்தியம் வைத்து நீர்மாற்றவும், பின்நாங்களிருவரும் போற்றவும், அவர்களெங்களை வாழ்த்தவுமானபின் ஈசனூற் கிடைத்திருக்கின்ற வஸ்துவைப் பக்குவப்படுத்தி, அவர்கள் வாய்க்கு ருசியாய்க் கொடுத்துவிட்டு, பிற்பாடு கணவனுக்குப் போசனமிட்டுத் தாம்பூலந்தந்து, அவர் வெளியே போகிறவரைக்கும் அவரைவிட்டு நீங்காமல் ஆவலுட்ட மூதலிய ஆதரணையை பண்ணிக்கொண்டிருப்பேன்,

இவ்வித வுபசாரங்களெல்லா முடிந்து எனது நாயகன் அலுவற் காரியத்திற்குப்போன அப்போதே, வந்திருக்கின்ற அதிதிகளுக்கும் பூசைபுரிந்து பணிவிடையாற்றி; பால், தயிர்,

பாயசம், பொரியல், பற்பலபண்டங்கள், இவைகளை வஞ்சனை நினையாமல் அன்னத்தோடுவைத்து உண்பித்து, பின்பு பசுக்கள் முதலியவற்றிற்குக் குளிர்ப்பாட்டிக் குங்குமமிட்டு, நீருடன் புல்லருத்து, ஆலயங்களுக்கு அபிஷேகப் பால் வார்த்துவிட்டு; உறவினருக் குபசரித்து, நானும் புசித்து, வேலைக்காரரும் என்னைப்போற் சாப்பிடும்படியாக விதரணையாய் விசாரித்து, வீட்டுவேலைக ளெல்லா நிதானித்து, எந்தெந்தச் சாமான்களில்லையோ? அவைகளை ஆண்பிள்ளைக்கு அறிவிக்காமற் சேகரித்து வருவாரும் போவாருங் கேட்ட கேள்விக்குத் தகுந்தவார்த்தையுரைத்து, வம்புவசனங்களுக்குக் கிடங்கொடுக்காமல் மறுத்து; அரைக்கணமேனுஞ் சோம்பலில்லாமல் அறுத்து, எந்தவிதத்தில் விழுப்புவந்தாலும் உடனே ஆகுசஸ்நானம் பண்ணுவேன். அமுதுக்குவந்த பெரியோர்களைக்கண்டு அகாலமென்று சொல்லாமல் அப்போதே சமையற்செய்து, அரைநொடிக்குள் பசியாற்றிப் போற்றுவேன். எத்தனைபேர் அமுதுக்கு வந்தாலுஞ் சற்றேனு மனமிளைக்கேன். எனக்கும் என்றுணைவனுக்கும் வேண்டுமென்று ஒருபதார்த்தமாகிலும் மறைத்துவைக்காமல் எதார்த்தமாய் படைப்பேன். எப்படிக் குயர்ந்த அருமைபெற்ற பழமுதலிய வஸ்துக்களானாலும், மைப்படியுங் கண்டத்த அன்பருக்கு வழங்குவேன், என் கணவனே தெய்வமென்று கனவிலும் மறவாமல் வழிபடுவேன். அவருடைய சொல்லுக்கு மல்லுகட்டி வார்த்தையாடேன். அவரது தம்பி, தமையன் முதலிய சுற்றத்தாரு மற்ற நத்தத்தாரு நன்மை கொண்டாடத்தக்கதா யிருப்பேன். அவர்களைத் தாட்சியில்லாமல் விசாரிப்பேன். முன்முறணிப் பின்பொறணிகூறேன். இவ்விடத்திய பேச்சு அவ்விடத்திலும், அவ்விடத்துப்பேச்சு இவ்விடத்திலுமாகக் கோட்சொல்லிக் கலகம் விளைக்கமாட்டேன், பெற்றோருக்கும் பிறந்தாருக்குஞ் சண்டையுண்டாக்கேன், பொருமைப்படேன், பொய்பேசேன், வீணாசைக்கொள்ளேன். வீட்டுடைமையை ஒருவருக்கு வீணில் கொடேன், செல்விருந்து, வருவிருந்து பார்த்துச் ஜீவன் முதரைச் சிந்தித்துக்கொண் டிருப்பேன். சொல்லுவார் பேச்சைக்கேட்டு மல்லுக்குப் போகேன். என்சாமிக்கும், மாமிக்கும், மாமனுக்கும் வேண்டியபதார்த்தங்களை விரும்பித் தேடிக்கொணர்ந்து, பாகமாகச்சமைத்து, பக்குவமாகப் பகுப்பேன். அப்படி பகுக்கும்போது ருசியான கறிகாய்களை வாய்மலர்ந்து கேட்குமுன்னமே, தாய்பரிந்தூட்டுந் தன்மைப்போல் அளிப்பேன். என்னாயகனுக்கு, ஊழியஞ்செய்கிற பணிவிடையாளரைப் பட்சமுள்ள பிள்ளைபோல் ரட்சிப்பேன்.

இவையன்றியும் என்கணவன் வீடுவிட்டு வேலைநிமித்தம் வேறோரூருக்குப் போயிருந்தால், அவர் வருகிறபரியந்தஞ் சந்தனபுஷ்ப பரிமளாதிகளை விரும்பேன், மஞ்சள் குங்கும தாம்பூலாதிகளைப் பொருந்தேன், தலைசீவிக் கொண்டையிட்டுக் கொள்ள மாட்டேன், பூஷணாலங்கிர்தம் பொருந்தேன், நல்ல வஸ்திரமுடுக்கேன், ஊருக்குப்போனவர் வந்தபிறகு இத்தியாதி அலங்காரத்துடன் எதிர்நின்று, அவர்கண்டு கண்களிக்கக் கலந்து இன்பம்பெறுவேன். உள்ளூரில் வெளியேபோயிருந்து வீட்டுக்குவரும் என்காதலனைக் காணுமளவும் நான் முந்திச்சாப்பிடமாட்டேன், இலையில் அன்னத்தைப் படைத்துவிட்டு, உப்பில்லை-ஊறுகாயில்லை-மிளகில்லை-மிளகாயில்லை-புளியில்லை-பூண்டில்லை-அரிசி கட்டை வறட்டி ஒன்றுமில்லையென்று முன்னின்று, மிடற்றைப் பிடிக்கின்றாப்போல் சொல்லமாட்டேன். தாம்பூலந் தரித்துக்கொண்ட சமயம்பார்த்து, நான்குநாளைக்குச் சாமக்கிரியையிருக்கும்போதே முன்னாடிச் சொல்லிச் சாக்கிரதைப்படுத்திக்கொள்வேன். ஆண்டுடையானுடைய சம்பாத்தியத்திற்குத் தக்கசெலவு தகுந்தபடிசெய்வேன். தாய்வீட்டுப் பட்சம்வைத்துச் சம்பாத்தியமுடிப்புகட்டி அடிக்கடி தாய்மனைக் கேகேன். (வாழ்மனைப்பண்டந் தாய்மனைக்கேகில் தாய்மனை பாழ்மனையாகும்.) என்றவாக்கியமறிவேன். நாயகன்மேல் நாட்டியகண்ணை மற்றொருவர்மேல் நாட்டேன். பெரியவர்களுக்குப் பேரன்புடன் பூசைபுரிந்து போசனமிடுவேன், வீட்டுப் பிரத்யேகம் வந்தால் ஒருவேளை அன்னம் உண்டுகொண்டிருப்பேன், மூன்றுநாள் ஸ்நானம் பண்ணிப் புறம்பிலிருந்து, நான்காநாள் நதியாதியில் ஸ்நானம் பண்ணி, ஐந்தாநாள் எண்ணையிட்டுமுழுகி, வீட்டைக் கோசல கோமயத்தாற் சுத்திபண்ணி, பஞ்சகவ்வியங் கூட்டியுண்டு, அப்பாற் புருடன்முகத்தில் விழிப்பேன். அவருடன் பேசுவேன். மாதருதுவான நான்குநாளும் மகிழ்நன்முகத்தில் விழித்தாலும் பேசினாலும் மங்கிலியத்திற்குக் குறைவுவரும். வீடுதூர ஸ்திரீயின் காற்றும்-நிழலும்-பேச்சும்-நாயகன்முதலிய நல்லோர்கள்பேரிற் படலாகாது. பட்டாற் புருடனுக்கு ஆயுள்குன்றிப்போம். நல்லோர்களுஞ் சபிப்பார்கள். கைவிலச்சமானகாலத்தில் வாக்கினாற் பேசாமற் கைச்சாடைகாட்டி, வேண்டிய காரியம் பெற்றுக்கொள்வேன். ஆறுமுதலிய குளங்களானுல் ஒருவனைத் தண்ணீர்மொண்டுவரச்சொல்லிக் கரைமேலிருந்து ஸ்நானம்பண்ணி, பிற்பாடு கோசலகோமயசுத்தியால் அசுத்தி விறங்கி, மஹத்துவக் கங்காதிடையநீண்டத்த மூழ்குவேன். ஒருவர் முகத்திலும் விழியாமல் நாயகன்முகத்தில் விழித்தால்,

ஆயுசுவிர்த்தியும் ஐஸ்வரியமும் உண்டாம். அருமருந்தன்ன
பிள்ளைகளையும் பெற்றுக்கொள்ளலாம். ஒருவேளை புருடன்
ஊரிலில்லாவிட்டால், நாயகனுடையருபத்தை மனதினினைத்
துநாட்டி, சந்திரகலையோட்டி, சூரியனைக்குறித்துத் தரிசிக்க
வேண்டும். அப்பால் பூசாவிதிகளிலும் புருடன்பணிவிடைக
ளிலுமிருந்து போதுபோக்குவேன். வயிற்றிற்பிறந்த பிள்ளை
யானாலும், கூடப்பிறந்த சகோதரனானாலும் எழுவயதிற்குமேற்
பட்டவரை முகாலம்பனம்பண்ணிப் பேசமாட்டேன். முந்தா
னையை அக்கினிகோட்டைக் காவலாய்க்கொண்டு, முழுமதி
யோடுங் கற்புடைமையாகிய பொக்கிஷத்தைக் காப்பேன்.
பதிவிரதாபூஷணமிருந்தால் திரிமூர்த்திகளு மதித்துத் துதிப்
பார்கள். மேலும் புருஷனுக்குக் காமயிச்சை யில்லாதிருந்
தால் ஸ்திரீயானவள் மேல்விழுந்து போராடப்படாது. சொப்
பனத்திலுங் காமத்தைக் கருதக்கூடாது. அப்படிக்கில்லாமல்
அறத்தின்வழி நில்லாமல், நாயகனைமதியாமல், நால்வருநகைப்
பாரென்றெண்ணாமல், மனதைப்போனவழிவிட்டு, மகிழ்நனை
வஞ்சித்து, மனக்காவல் - முன்தானைக்காவல் - வம்சாசாரக்கா
வல் இவைகளைமறந்து, நல்லவள்போலிருந்து, நடைநொடிபா
வனைபுரிந்து, இரகசியத்திற் சோரத்துவம் பண்ணுவாளாகில்
மகாகொடியபாவியாவாள். துட்டநடத்தையுள்ள கெட்ட
ளாவாள். பகலையிருளென்ற பழிகாரியாவாள். அவளிருக்கும்
வீடு யாளியிருக்குங்காடு, இருட்டுநிலம், திருட்டுச்சுலம், களர்ப்
பூமி, அழற்பாறை. கடுவிடம், கசப்பெட்டி, கல்லாக்கயவர்
மனம் ஆகியவிவைகளுக்குச் சமானம்.

## தன்புருஷனைவிட்டு அன்னியபுருஷரிடத்தில் சரசஞ் செய்யும் ஸ்திரீகளுக்கு யமதண்டனை.

காமம்பெரிதென்றெண்ணி கலியாணம் பண்ணிக்கொண்
டகணவனை வஞ்சனைபண்ணி, கந்தகஸ்தூரி கதம்பம்புனைந்து,
வந்தநாயகனுடன் கலந்து மருவிய நிதம்பத்தில்; யமகிங்கரரா
னவர் முசலமாகிய இருப்புலக்கையை இருப்புப்பொறிபறக்
கக் காய்ச்சிச் சொருகுவார்கள். அவளைப்பிடித்து ஈயக்கொட்
பறையிற் றேய்த்து, உருகியுருகி ஊன் பெருகியோடும்படியா
ய்ச் சூலத்தைக்கொண்டு குத்துவார்கள், செவசெவவென்று
காய்ந்திருக்கிற செப்புப்பொம்மையை ஆசையுடன் தழுவிக்
கொள்ளடியென்று அடிப்பார்கள். அவ்வேதனையாற் புரண்டு

உருண்டு துடிதுடித்துப் பதைக்கும்போது, நெருப்பிற்காய்ச்
சிய இருப்புச்சலாகையினாற் சூடுவார்கள், கீழேதள்ளிக் கிள்ளு
வார்கள், அட்டைகளைவிட்டுக் கடிப்பிப்பார்கள், புழுக்களினால்
குடையப்பண்ணுவார்கள், திப்பிவண்டுகளால் துளைப்பிப்பார்
கள், கிட்டிகொண்டு பிடிப்பார்கள், குறடுகளினாற் சதைகளை
அள்ளுவார்கள், நாய்களினாற் கடிப்பிப்பார்கள், நகத்தில் ஊசி
யேற்றுவார்கள், குதத்தினின்றுங்கழுவேற்றுவார்கள், இரண்டு
தூணாட்டி, அதன்மேற் பானுவட்டம்போட்டு, அதனடுவிற்சங்
கிலிமாட்டி, அச்சங்கிலிநுனியை மூக்கிலும் வாக்கிலுமேற்றி,
கீழேநெருப்பிட்டு, எமபடாள் இருபுறத்திலுங் காவலிருப்பார்
கள். தலைமேல் நெருப்புபற்றிய இருப்புமுள் முடிவைத்திருத்
துவார்கள். விஷத்தைக்கொண்டுவந்து அருத்துவார்கள், இரு
ம்பைக்காச்சிக் குதத்தினிடத்திலேற்றுவார்கள், கொட்டாப்பு
ளிகொண்டு ஆப்புவைத்திறுக்குவார்கள், கத்திக்கித்தனை சதை
யாகக் கைகாலை நறுக்குவார்கள், கோடாரிகொண்டு தறிப்பார்
கள், சம்மட்டியடியாற் சதைப்பார்கள், தலைகீழாய்த் தொங்க
விட்டு மூலைமீது சுடர்வேற்றயிலஞ் சொரிந்து, மூக்கிற் காரக்
சடுமைச் சாறேற்றி, கால்விரலுங் கைவிரலுஞ் சுடரேற்றி,
சற்றைமயிரைக் கொளுத்தி, ரம்பங்கொண்டறுத்து, கழுகு-
காக்கை-பருந்து-நரி-இவைகளை உசுப்பிப் பிடுங்கவிட்டுச் சித்
திரவதை செய்வார்கள். இப்படிசெய்யும்போது முறையோ
வென்றழுது, கதறி-பதறி-சிதறி-கைகாலுதறி-வலிப்பெடுத்து
மொறுகிக் கூச்சற்போடுவாளேயானால்; அக்கால் பேசாதே:
பேசாதே: என்று இருப்புச்சோட்டா-முள்தடி-வளைதடி-வச்
சிரதண்டம்-இவைகளினாலடிப்பார்கள், இடிப்பார்கள், பழு
வாயுதத்தால் துண்டிப்பார்கள், இரும்புமணலை வறுத்துக் சற
ண்டியில்வாரி அவள்திரேகத்தில் ஓயாமற் கொட்டுவார்கள்.
இரும்புச்சட்டியிலிருத்தி அடியில் தீமூட்டுவார்கள்.

இன்னுமந்தக் கற்புநிலைகெட்டுக் கணவனைவிட்டு வஞ்
சனைகொண்ட காமக்கிழத்தியை உலைக்களத்தில் வேகக்காட்டி
யடித்துத் திரட்டியிருக்கின்ற முரட்டுமுள்முனையிலே பொரு
பொருத்தும்படிக்குப் பேசிய எமனுடைய வார்த்தையின்வண்
ணம் தாட்சணியம்பாராமல் யமதூதர்பிடித்து, எலும்பையொ

டித்து, எண்ணியாயிரம் எண்ணுமலாயிரம் அடிஅடித்து, நீ புருஷனையிகழ்ந்து-சத்தியம்புரண்டு-குலகோத்திரத்தைக்கெடுத்து-குடிகேடியென்றுபேரெடுத்து-அன்னியபுருஷசகத்தையடுத்து-அவனிடம்படுத்து-ஆண்புடையானைக்கடுத்து-வீட்டுப்பொருளைக்கொடுத்து-விரதமுதலிய நோன்பையும் விடுத்து-வஞ்சநெஞ்சுடையவளாயிருந்தனையே: இதோபார் அந்தஇன்பசுகம். இந்தக் கழுமுனையிலேறி அனுபவி என்று இருத்தி அவளிரண்டுகாலையும் பொருத்தி, பக்கத்திற் சூலம்பாச்சிக் கெற்பங்கலங்கவன்றி, தோளையுங் காலையும் பிடித்திழுத்துக் கண்விழிபிதுங்கக் கோத்தும்படிக்கு நரகக்குழிக் காக்கையையேவுவார்கள். இப்படி வேதனைபட்டுக்கொண்டிருக்கும்போது புருஷனைவஞ்சித்த பூவையிவளென்று யமகிங்கரரில் ஒருவன் சொல்ல, அதைப்பலர்கேட்டு, அவள்சதையைத் தங்கள்பல்லினால் மெல்லுவார்கள். இவளெல்லாப் பாவியரிலும் புருஷனை வஞ்சித்த பெரும்பாவியென்றுசொல்லி, குறுந்தடியாலடித்துக் கையுங்காலுங்கட்டி, சரீரம் அசையாமற்பந்தித்த, சீலுக்குக்கீல் கூராணியடித்து, கிட்டியிட்டுக்கட்டி, செம்பையுருக்கிக் கடிதடத்தின்பேரிற் கொஞ்சங்கொஞ்சமாய்ச் சுரசுரவென்ன வார்ப்பார்கள். அந்தச் செம்புரசம் பட்டுக் குபீரென்றெரிந்து புகைச்சலுமெரிச்சலுமிகுந்து ஐயோவென்று பறக்கும்போது, இருப்புக்குறட்டாலிடித்து, வாய்க்குறட்டைப் பிடித்து வலிப்பார்கள். பேய்நாய்கள்-பாய்நாய்கள்-சென்னாய்கள்-வன்னாய்கள்-இவைகள் அவளுடைய சதையைக் கடித்திழுத்து தின்னத்தக்கதாய் உசிப்பிவிடுவார்கள். மூக்கு நீளமுடைய ஆந்தை-கோட்டான்-கழுகு-பருந்து-காக்கை-இவைமுதலிய சேர்க்கையினங்கள் சேர்த்து, அவளாக்கையைக் கொத்தியுண்ணும்படி செய்வார்கள். அப்போதவளுடையபிராணன் அவஸ்தைப்பட்டுக் கோரமான விகாரரூபத்துடன் கிடப்பள். அப்போதுங் கூர்மையான கொழுச்கொண் டுழுவார்கள். இருப்புக் கொப்பறையெண்ணெயிலிடுவார்கள். அடுப்பிலேற்றியெரிப்பார்கள். குண்டுகெட்டாய்க்சட்டிக் கொளுத்துவார்கள். சரீரங்கள் பத்தலாய் வெடித்து ரெத்தங்கள் வடியவு நிணங்கள் வழியவும் வறுப்பார்கள். பெரியரம்பங்கொண் டறுப்பார்கள்.

அய்யோ! சேற்கெண்டைபோன்ற கண்ணால் மருட்டிப் பரபுருடனைச்சேர்ந்த பாவையர் அந்த யமபடாளாற் படும்பாட்டை, ஆ! ஆ! நானென்னென்று சொல்லுவேன்? இவர்கள்கதி இப்படியாக, நாயகனடுங்கடந்தவள், எதிர்த்துப்பேசினவள், சண்டைபோடுகிறவள், சத்யமில்லாதவள், சாதங்கறியைத் தன்மட்டி லெடுத்தொளித்துக்கொண்டவள், இன்பகாலத்திற் றடைசெய்தவள், புருடனைக் கடன்படச்செய்தவள், கணவன்சொன்ன ரகசியத்தைப் பலபேர்காதிற் போட்டவள், மணவனிடத்தில் மனமில்லாமற் பட்சம்யிருப்பதுபோ லபிநயித்தவள், வீடேறிவந்த விருந்தைப் பகைத்தவள், வீட்டிற்பிறந்தாரை வெறுத்துக்கடிந்தவள், வீட்டுடைமைகளைத் திருடிவிற்றவள், பிட்சைபோடாதவள், தன் தங்கை-அக்காள் மச்சினிமார் இவர்முதலியபேர்களைக் கூட்டிக்கொடுத்தவள், வேசையரைப் போற் காசாசைகொண்டவள், தகாதபெண்களுடன் சாவகாசப்பண்ணினவள், மலசலங் கழிக்கும்போது மணற்கொண்டு சுத்திசெய்யாதவள், முழுகல் குழையல் முதலிய காலக்கடனை முடிக்காமற் சமையல்வீட்டிற் புகுந்து சாப்பாடிட்டவள், படுத்தும்-இருந்தும் - புருடன்கேட்டகேள்விக்குப் பயமில்லாமல் உத்தரவுகொடுப்பவள், கணவனுடன் கலந்தபோதே ஸ்நானம் பண்ணாதவள், கர்வங்கொண்டு புருடனுக்குப் போசனத்தைக் கெடுத்தவள், கல்லு-நெல்லு புல்லு-உமி - இவைமுதலியவை போக்கிச் சமைக்காதவள், புருடனெளியவனென்று அவனைப் பொருட்செய்யாமற்போனவள், அவன் கால்கைபிடித்துக் காலமறிந்துநடவாதவள், மாமன் மாமி கோரியகாரியத்தைக் கெடுபண்ணினவள், முன்காரியம்பின்காரியம் அறிந்து முடிக்காமல் அசடுதேடினவள், அண்டையசலுக்குப்போய்ச் சண்டையிழுத்தவள், மணவன்-மச்சினன்-மூத்தான்-இவர்களைப் பகைமூட்டி வைத்தவள், நாயகனுடைய நற்செய்கைகளுக்கு இடங்கொடாதவள் இப்பேர்ப்பட்ட பெண்களை யமதூதர் கொண்டுபோய் இரும்புத்தூணை நெருப்பிற்காய்ச்சித் தழுவச்சொல்லியிடிப்பார்கள், குண்டாந்தடிகொண்டு அடிப்பார்கள், எலும்பை யொடிப்பார்கள், இருப்புமுள்ளுகளிலேபோட் டுருட்டுவார்கள், கத்தியைப்பரப்பிக் காய்ச்சிமிதிப்பிப்பார்கள், கையிற் கயிற்றைக் கட்டி நரகக்கிணற்றில் துவைத்தெடுப்பார்கள், இருப்புக்கூண்டிற் தூக்கி யேறிட்டு வைப்பார்கள், ரெத்தமுஞ் சீழு நிரம்பிய நரகத்திற் சுற்றிலுங் கருங்குளவி மொய்த்துக்கொண் டிரைய அழுத்துவார்கள், துற்கந்தமாம்ஸநரகத்தில் தறுப்பார்கள். மலசலநரகத்திற் கவிழ்த்து வாட்டுவார்கள், அக்கினிக்குழியிற் புகுத்துவார்கள், அனற்பொறி நிரையத்தி லிருத்துவார்கள்,

பாம்புக்கிணறு-அட்டைக்கிணறு-அரணைக்கிணறு-தேட்கிணறு-விரியன்கிணறு-நண்டுவாய்க் காலிக்கிணறு-பிள்ளைப்பூச்சிக்கிணறு-இவைகளிற் போடுவார்கள். பெரும்புலிப்போன்-கரடிப்போன்-சிவிங்கிப்போன்-செந்நாய்ப்போன்-சிங்கப்போன்-சிறரவப்போன் முதலியவைகளில் விடுப்பார்கள். கத்தி-வாள்-ஈட்டி-முள்ளுமுனை இவைகளை மாட்டிப் புடைத்து வருத்தப்படுத்துவார்கள். இந்தப்படிக்கு அனேகவித பேதமான இருபத்தெட்டுகோடி நரகங்களிலேயும் புகுத்திக் கண்டிப்பார்கள்.

அம்மா புண்ணியவதியாகிய கைகையே! இப்பேர்ப்பட்ட துன்மார்க்கப்பெண்களை நான் கண்ணிலும்பாரேன், அவாள் பேச்சைக் காதிலுங்கேளேன், அவாளைக் கலந்தும் விளையாடேன், எனக்குத்தகுந்தஇஷ்டமுள்ளபதிவிரதைகளுடன் ஒழுகுவேன், பழமைபாராட்டிப் பழகுவேன், இஷ்டங்கொண்டு பேசுவேன், மற்றவேளைகளில் வீட்டுவேலைகளும் இல்லறதருமமும், பிராணனாகிய புருடன்பணிவிடையும் பிரதானமென்று பார்ப்பேன். இப்பேர்ப்பட்ட சற்கருமங்களெல்லாஞ் சர்வசாக்கிரதையாகப் பண்ணி, நாளுக்குநாள் அபிவிர்த்தியாகி இந்தப்பாக்கியத்தை யனுபவித்துக்கொண் டிருக்கிறேன் என்று சாந்திலைசொல்ல, அதைக்கேட்ட கைகையானவளுக்கு விவேகமும் ஞானமும் பிறந்து பிரதட்சணம்பண்ணி, அம்மா! நீர் சொன்ன எதார்த்தவார்த்தையனைத்துஞ் சத்தியமே: என்று புகழ்ந்து கொண்டாடி, மகாலட்சுமிக்குச்சமதையான கைகை செலவுவாங்கிக்கொண்டு மகமேருகிரிச்சாரலிலிருக்கின்ற தன் வீட்டுக்குப் போயினள். என்று பிரமசாரியாகிய வீஷ்மர் விளம்ப, இத்தருமத்தைக்கேட்ட தருமராஜன்சந்தோஷித்து, பாட்டனுக்குப் பிரதட்சணம்வந்து நமஸ்காரந்தந்து, இதனைச் சொல்லுகிறார். தர்மத்துக்கெல்லாம் பதிவிரதாதர்மமே பெரிது. ஆகையால் பதிவிரதாக்களுடைய மகத்துவத்தை யென்னொரு நாவால் சொல்லமுடியாது யென்று தர்மனந்தனர் சொல்லி தன்னிருப்பிடம்போய்ச் சேர்ந்தனர். பதிவிரதாபூஷணமிருந்தால் அழியாச்செல்வமும், ஆயுள்விர்த்தியும், சத்துருபீடை-துர்வியாதி-துர்மரணம்-துர்சோபம்-தற்பயங்கரம்-இவையாவும்நீங்கி அறயோங்கி இகத்திலும் பரத்திலும் சுகமடைவார்களென்பது இதுசத்தியம்.

பதிவிரதாபூஷணமென்னும் ஸ்ரீகளுக்கு ஞானபோதினி

முற்றிற்று.

E. I. Press, Madras.

# விளம்பரம்

இப்புத்தகத்தில் சிலது வசனரூபமாகவும், சிலது கதைரூபமாகவும், பெண்டுகளுக்கு கஷ்டமில்லாமல் வாசிக்க தெளிவான நடையி லச்சிடப்பட்டிருக்கிறது.

(1) கற்புநிலை இல்லாமங்கையற்கு வற்புருத்த லென்றும், (2) ஸ்திரீகள் அன்னியபுருஷரை கனவிலுங் கருதக்கூடா தென்பதைப்பற்றியும், (3) பதிவிரதாஸ்திரீகள் பூர்வத்தில் அனுஷ்டித்த தர்மமும், (4) மாமியார் - மாமன் - புருஷன் - புருஷவர்க்கத்தைச்சேர்ந்த பந்துக்களுக்கு, இக் குலஸ்திரீகள் நடக்கவேண்டிய ஒழுக்கமும், (5) ஸ்திரீகள் அன்னியபுருஷ சாவகாசத்தால்வந்த நரகவேதனையையும், யெமபடர்கள் செய்யும அகோர கஷ்டத்தையும், வேதனைகளையும், இன்ன தென்று இப்புத்தகத்தில் தெளிவாய் தெரியப்படுத்தியிருக்கின்றன.

இப்புத்தகம் வேண்டுவோர் சென்னை பெத்துநாயக்கன்பேட்டை நாகமணிதோட்டத்துத்தெருவு5-வது நெம்பர் வீட்டில் பொட்டகிராப்பர் ம-ா-ா-ஸ்ரீ, சீதாபதிபிரதர்ஸ், அவர்களிடத்திலும், ஷைபேட்டை ஸ்ரீரங்கப்பட்டணம் சுப்பாராயமுதலி தெருவு - 16 - வது நெ. வீட்டில் நம்பிநாயுடு அவர்களிடத்திலும், பச்சயப்பன் இஸ்கூல்சமீபம் புஸ்தகஷாப்புகளிலும், திருவல்லிக்கேணிபார்த்தசாரதி சந்நிதிகடைவீதியிலும், ஷை சந்நிதிக்கி சமீபம் தீக்ஷித அக்ராரம் வீதி ம - ா - ா - ஸ்ரீ, எஸ் - பி. நாராயணஸ்வாமிநாயுடுகா ரவர்களிடத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

வெளியூராருக்கு புஸ்தகம் வேண்டுமானால் முன்பணம் அனுப்புகிறவர்களுக்கு அனுப்பப்படும். அல்லது போஸ்டு ஸ்டாம்புகளாகவாவது அனுப்பிக்கவும்.

திக்குகடித புத்தகம் 1 - க்கு விலை அணா $2\frac{1}{2}$.
இங்கடித புத்தகம் 1 - க்கு விலை அணா 2.

100, 500 புஸ்தகம் வாங்குபவற்கு 100 க்கு 20-புத்தகம் [illegible]படும். வி-பி, மூலமாயும் அனுப்பப்படு[illegible]

[illegible] டு.